For private circulation only

தனிசுற்றுக்கு மட்டும்

கிறிஸ்தவ
# வரலாற்று சுவடுகள்

தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்விதழ்


www.tchsportal.co.in

ஜூன் 2020 • இதழ் 1

# தென்னாட்டு கிறிஸ்தவம்



Rev. CTE. Rhenius



William Carey

கர்த்தர் நன்மையானதைத் தருவார். சங்கீதம் 85: 12

திருநெல்வேலி திருமண்டலம் - நல் ஆலோசனைத் திருப்பணி

# தேவ ஆசீர்வாதத்துடன் உங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுங்கள்!

## www.TDTA ChristianMatrimony.com

**அனைத்து கிறிஸ்தவ சபைப்பிரிவினருக்கும் ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான வரன்கள்!**

**சிறப்பம்சங்கள்:**

- எளிதான பதிவு முறை மற்றும் வரன் தேடுதல்.
- தெளிவான வரன் விபரங்கள்.
- நாள்தோறும் உங்கள் தேர்விற்கேற்ற புதிய வரன்கள்.
- வரன் வீட்டாரை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.
- உங்கள் தகவல்களுக்கு இடைத்தரகர்கள் தொல்லை இல்லா முழு பாதுகாப்பு.
- உன்னதமான சேவை. கமிஷன் கிடையாது.

**இன்றே வரன் பதிவு செய்யுங்கள்.**



**இயக்குநர், நல் ஆலோசனைத் திருப்பணி,**
நூற்றாண்டு மண்டபம், முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627002.

மேலும் விபரங்களுக்கு: **75 9843 1282** **(0462) 400 1282**

**வேலை நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

## TDTA கிறிஸ்தவத் திருமணத் தகவல் மையம்

| பாளையங்கோட்டை | அழகியபாண்டியபுரம் |
| --- | --- |
| நூற்றாண்டு மண்டபம், முருகன்குறிச்சி. | சங்கரன்கோவில் மெயின்ரோடு, பேருந்து நிலையம் எதிரில். |
| (0462) 258 1282 | 75 9843 1282 |

tdtachristian.matrimony
support@tdtachristianmatrimony.com

**Trusted Matrimonial Site since 2008.**
**Everyday Prayers for Members.**
**Thousands of Happy Families Already!**
**ACT NOW.**

www.TDTA ChristianMatrimony.com

Rs : 60

கிறிஸ்தவ
வரலாற்று சுவடுகள்

தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்விதழ்

www.tchsportal.co.in

பதிப்பாளர் : மன்னா செல்வகுமார்

ஆசிரியர் : ஜான் ஞானராஜ்

வடிவமைப்பு : சுஜித் ரெக்ஸ்

Tinnevelly Christian Historical Society
2-2-3(4), North Street,
Bungalow Surandai - 627859
Tenkasi District




ஆசிரியரின் சுவடு 4

திரு.J.ஜான் ஞானராஜ்

எருசலேம் என் ஆலயம் 8

திரு.அன்ட்ரியு ரத்தன சிங்

பேயை வென்ற ஜெபம்! வழி காட்டிய பேரொளி! 11

திரு. A.P.T.ஞானராஜ்

ஜூன் மாதம் பிறந்த நாள் கொண்டாடும் மிசனரிகள்,குருமார்கள் மற்றும் பாடலாசிரியர்கள் 13

TCHSPortal

ஜூன் மாதம் நினைவு நாளை ஆசரிக்கும் மிசனரிகள்,குருமார்கள் மற்றும் பாடலாசிரியர்கள் 13

TCHSPortal




முன்னோரை தேடி 14
TCHSPortal

திருநெல்வேலி திருச்சபையின் மூலைக்கற்கள் 16
TCHSPortal

தமிழகத்தின் வரலாற்று தடங்களில் மறைக்கப்பட்ட இடம் 17
திரு.ஜே.பர்னபாஸ்

பாளையங்கோட்டையில் இராணுவ படை பிரிவுகள் 20
திரு. இ.மாரியப்பன்

சர்ச்சைக்குரிய எரிகோ ! 22
திரு. T. ஜான் செல்வின்

திருநெல்வேலி மாவட்டம் பிரமதேசத்தில் கிறிஸ்தவம் 24
திரு.J.ஜான் ஞானராஜ்

அங்கியும் அதன் தோழமை வஸ்திரங்களும் 27
திரு.A.பத்மராஜன்

சமரசம் செய்யாத சபை 29
அருள்திரு. முனைவர். ச. இராஜசேகரன்


*அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம்; எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள். பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்.*

*சங்கீதம் : 78 : 3,4*

J. ஜான் ஞானராஜ்



# ஆசிரியரின் சுவடு

## கடந்த இரண்டு ஆண்டுகளாக திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தம்பி, திரு.மன்னா செல்வகுமார் அவர்களால் அவர்களது அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. திரு.மன்னா செல்வகுமார் அவர்களுக்கு இக்காரியங்களில் மிக உறுதுணையாக சுஜித் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களோடு இணைந்து நானும் இப்பணியைச் செய்திட ஆண்டவர் வழங்கிய நல்வாய்ப்புக்காக ஆண்டவருக்கு முதற்கண் நன்றி செலுத்துகிறேன். அன்பிற்குரிய தம்பிமார் திரு.மன்னா செல்வகுமார், சுஜித் க்கும் நன்றி செலுத்துகிறேன்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆண்டவர் வரலாற்று காரியங்களைப் பதிவு செய்வதில் தமக்கு ஏற்ற இறைமக்களைப் பயன்படுத்துகிறார்.

### வரலாற்றை பதிவு செய்வதில் ஆண்டவர் அதிகமாக பயன்படுத்திய தேவதாசர்கள்

வரலாற்றைப் பதிவு செய்வதில் பழைய ஏற்பாட்டில் மோசே, யோசுவா, எஸ்ரா ஆகியோரையும் புதிய ஏற்பாட்டில் நற்செய்தி யாளர்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், பேதுரு, பவுல், ஆகியோரையும் அதிகமாக பயன்படுத்தி உள்ளதை நாம் பார்க்கிறோம். கிறிஸ்தவ வரலாற்றை பதிவு செய்யும் இறைபணியில் நாம் இந்த காலகட்டத்தில் நமது கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தை ஆண்டவர் பயன்படுத்துவதைக் காணும்போது ஆண்டவருக்கு மிகுந்த நன்றி செலுத்துகிறேன்.

### இதுவரை நாம் செய்தது

- திருச்சபை வரலாறு.
- மிஷனரிகள் வரலாறு.
- கிறிஸ்தவ பாடல்கள் உருவான வரலாறு.
- பாடல் ஆசிரியர்களின் வரலாறு.
- கிறிஸ்தவ மிஷன் கிராமங்கள் உருவாக்கம் பெற்ற வரலாறு போன்ற வரலாறு சார்புடைய காரியங்கள்
- புலனம் (வாட்ஸ்அப்)
- முகநூல் (ஃபேஸ்புக்) இணையம்
- யூ டியூப்

வாயிலாக இதுவரைப் பகிர்ந்து கொள்ளப்பட்டன ஆனாலும் எழுதப்பட்ட வார்த்தை நிலையானது (**Written word is Remineth**) என்ற பொன்மொழிக்கு ஏற்ப வரலாறு சம்பந்தப்பட்ட காரியங்களை ஒருங்கிணைத்து

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்** என்ற மாத இதழை **E-Publishing** மற்றும் மாதாந்திர இதழாக வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது **அந்த முதலாம் இதழ் தான் இது.**

இந்த மாதாந்திர இதழில் வெளிவரும் கிறிஸ்தவ வரலாறு சம்பந்தப்பட்ட காரியங்கள் நம் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாறு சம்பந்தப்பட்ட ஆர்வத்தை உருவாக்கும் வண்ணமாக தமிழ் கிறிஸ்தவ வரலாற்றுக் காரியங்கள் குறிப்பாக தமிழக கிறிஸ்தவ வரலாற்று காரியங்கள் பகிரப் படவுள்ளன.

திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக **10 அம்ச செயல் திட்டம்** உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றை நமது சங்கத்தின் முதல் மாத இதழ் வாயிலாக வெளிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்

**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக 10 அம்ச செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது**

**1.திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் சங்கத்தின் சார்பில் மாதாந்திர இதழாக கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள் எனும் மாத இதழ்**
***(a). E-Journal* ஆகவும்**
***(b). Hard Copy* வடிவிலும் வெளியிடுவது**

2. பழமைவாய்ந்த கிறிஸ்தவ வரலாற்று நூல்களை (சபை வரலாறுகள் கிறிஸ்தவ மிஷன் கிராம உருவாக்க வரலாறுகள் மிஷினரிகளின் வாழ்க்கை வரலாறு கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள் அவற்றை எழுதிய பாடலாசிரியர்களின் வாழ்க்கை வரலாறுகள்) சேகரிப்பது

3. பழமைவாய்ந்த கிறிஸ்தவ வரலாற்று நூல்களை ***Scan*** செய்தும் ***Digitalized*** செய்தும் பாதுகாப்பது.

4. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மறுபதிப்பு வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகளை மறுபதிப்பு செய்வது குறிப்பாக பேராசிரியர் அருள்திரு கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களால் வெளியிடப்பட்ட

1. திருநெல்வேலி அப்போஸ்தலர் ரேனியஸ் எனும் நூல்
2. சார்ஜெண்ட் அத்தியட்சர் எனும் நூல்
3. குளோரிந்தா எனும் நூல்

**5. திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்திற்கு என**
1. **ஆண்டு உறுப்பினர்கள்**
2. **ஆயுட்கால உறுப்பினர்கள்**
3. **குறுகியகால ஆவணங்களை பார்வையிடும் உறுப்பினர்கள் சேர்ப்பது**

6. இதுவரை வெளிவராத முக்கியமான மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்று ஆவணப்படங்களை வெளி-யிடுவது
1. ரேனியஸ்
2. ராக்லந்து
3. ஜான் தாமஸ்
4. ஆர்தர்மர்காஷிஸ்
5. பேரன்புருக்
6. ரிங்கல் தௌபே

**7. மிஷனரிகள் வாழ்ந்த இடங்களையும், மிஷனரிகள் கல்லறைகள் உள்ள இடங்களையும், அவர்களால் கட்டப்பட்ட தேவாலயங்களையும் இரத்த சாட்சிகள் வாழ்ந்த இடங்கள் இரத்த சாட்சிகளாக அவர்கள் மரித்த இடங்கள் ஆகியவற்றையும் பார்க்க விரும்புகிறவர்களின் வசதிக்காக Mission tourist map அதில் தங்குமிடங்கள் புறப்பட்டுச் செல்கின்ற வழித்தடங்கள் ஆகியவற்றை சிறப்பாக அமைப்பது**

8. பராமரிக்கப்படாமல் பாழடைந்த நிலையில் இருக்கிற மிஷனரிகளை நினைவுபடுத்துகிற மிஷனரிகளின் கல்லறைகளை பராமரிப்பது

**9. திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பில் ஆய்வு நூலகம் அமைப்பது அந்த ஆய்வு நூலகத்தில் சிறிய அளவிலான மிஷனரிகளின் உருவச்சிலைகள் கிறிஸ்தவ பாடலாசிரியர்களின் உருவச்சிலைகள் பழமை வாய்ந்த மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் சபை வரலாற்று நூல்கள் கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாற்று நூல்கள் பாடலாசிரியர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்**

ஆகியவற்றை சேகரித்து மக்கள் பயன்பாட்டில் வைப்பது மிஷனரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து அவற்றை மக்கள் பார்வைக்கு வைப்பது

10. திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கம் நடத்துவது
வரலாற்று கள ஆய்வு பயிற்சிக்கான **Workshop** நடத்துவது

மேற்கண்ட 10 அம்ச செயல் திட்டங்களையும் நமது கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக சிறப்பாக செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள் வாசகர்களாகிய நீங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையாக நடைபெறும் இந்த மாபெரும் பணியில் பங்குபெற்று ஒத்துழைப்பு நல்க அன்புடன் வேண்டுகிறோம்.

### மிஷனரிகளின் ஊழிய வரலாறு மற்றும் அதன் மூலமாக புதிய மிஷனரிகளின் அர்ப்பணிப்பு

பதினெட்டாம் நூற்றாண்டில் மிஷனரிகளாகப் பணிசெய்த மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்றை வாசித்து அறிந்தவர்களே அடுத்த தலைமுறையில் மிஷனரிகள் ஆகப் பணிசெய்ய தங்களை அர்ப்பணித்தனர் ஆதலால் வரலாறு மிஷினரி ஊழிய பணிக்கு பெரும் தூண்டுதலாக இருந்துள்ளதை நாம் அறிந்துகொள்ள முடியும். உலக வரலாற்றையும் உலக வரைபடத்தையும் நன்கு அறிந்திருந்ததால் தான் பன்மொழிப் பண்டிதர் ஆன மாபெரும் மிஷனரி வில்லியம் கேரி மிஷனரி பணி செய்ய இந்தியாவிற்கு வந்தார் இது வரலாறு கூறும் உண்மை .

### வரலாறு நமக்கு உணர்த்தும் அனேக காரியங்கள்

வரலாறு நமக்கு அனேக படிப்பினைகளைத் தருகிறது. வரலாறு நமக்கு அனேக ஆலோசனைகளைத் தருகிறது.குளிர்காலத்தில் நெப்போலியன் மேற்கொண்ட ரஷ்ய படையெடுப்பு வெற்றியை தரவில்லை இந்த வரலாற்றை சரிவர வாசித்து அறிந்து கொள்ளாததால் பிற்காலத்தில் முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் ரஷ்யா மீது படையெடுப்பு மேற்கொண்டவர்கள் வெற்றி பெற இயலவில்லை.

நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற ஆர்வம் சிலம்பக்கலை வர்மக்கலை போன்றவற்றில் தேர்ச்சி கொண்ட இருவர் கிறிஸ்தவராக முன்வந்தனர் அதில் முதலாமவர் கிறிஸ்தவராக மாறின சின்னமுத்து என்ற **தாவீது சுந்தரானந்தம்** (1772 – 1806) அவர் காலன் குடியிருப்பை தந்தை ஊராகவும் விஜயராமபுரத்தைத் தாய் ஊராகவும் கொண்டவர் அவரது ஊழியவேகத்தை அக்கால போதகர்களும் நாமும் சரியாக பயன்படுத்தவில்லை சரிவர விசாரணை செய்யப்படாமல் மிஷனரி ரிங்கல் தோபே அவர்களால் தாவீது சுந்தரானந்தம் பணிநீக்கம் செய்யப்பட்டார் திசையன்விளை அருகிலுள்ள பெத்லகேமில் குறைந்த வயதில் அவரை இழந்தோம்திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் அப்படியே நின்றுபோனது.

இரண்டாமவர் **அய்யா வைகுண்டர் என்றழைக்கப்படும் முத்துக்குட்டி சுவாமிகள்** (1809-1851) இடையன்குடி பகுதியை பூர்வீகமாகக் கொண்ட இவரது பெற்றோர் பனை ஏற்று தொழில் புரிய தென் திருவாங்கூர் சமஸ்தானத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தில் தெற்கு தாமரை குளம் அருகில் உள்ள சாஸ்தான்கோவில்விளை என்ற இடத்தில் பூவண்டார்தோப்பில் குடியேறினர் தாமரைக் குளம் அருகில் உள்ள இங்கு மகாராசன் வேதமாணிக்கம் போதகர்கள் சார்லஸ் மீட், சார்லஸ் மால்ட், போன்றோரின் நற்செய்தி பணியால் அந்த வட்டாரம் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக் கொண்டபோது கிறிஸ்தவராகி தாமரை குளத்தில் ஆலய பணியாளராக சிறந்த பணியை செய்தவர் முத்துக்குட்டி சுவாமிகள். தென் திருவாங்கூர் சமஸ்தான அரசின் சாதிய அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பாக மிக வேகமாக செயல்பட வேண்டும் என இவர் காட்டிய வேகத்திற்கு அங்கு பணி செய்த போதகர்கள் முழு ஆதரவு கொடுக்காததால் கிறிஸ்தவத்தை விட்டு விலகினார் பிற்காலத்தில் அவர் அய்யாவழி மார்க்கம் எனும் தனி மார்க்கத்தை நிறுவி அகிலத்திரட்டு எனும் தனி நூலையும் உருவாக்கிக் கொண்டார். இது தென் திருவாங்கூர் சமஸ்தானத்தின் குமரி மாவட்டம் மட்டுமல்லாது தமிழ்நாட்டின் அப்போதைய ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட ஊழிய வளர்ச்சியையும் பெரிதும் பாதித்தது மேற்கண்ட வரலாறுகள் நமக்கு அநேக காரியங்களை உணர்த்துகிறது.

நெல்லை அப்போஸ்தலர் கனம் ரேனியஸ் ஐயர் அவர்கள் 1820 முதல் 1835 வரையில் சுமார் 400 சபைகளையும் 150 பள்ளிக் கூடங்களையும் நிறுவி மிகச் சிறப்பாக பணி செய்து வந்த போது ஊழிய வளர்ச்சியில் பொறாமை கொண்டு அவர் எழுதிய சிறு நூலுக்கான மதிப்புரையை பெரிதுபடுத்தி, காழ்ப்புணர்ச்சி காரணமாக லண்டன் சி .எம் .எஸ் தாய் சங்கமும் சென்னையில் J.டக்கர் தலைமை-யிலான மெட்ராஸ் C.M.S கமிட்டியும் நடவடிக்கை எடுத்து அவரைப் பணிநீக்கம் செய்தபோது சிறு நூலுக்கு மதிப்புரை யைத் தாம் எழுதியது குறித்து வருத்தம் தெரிவித்து லண்டன் CMS தாய் சங்கத்துக்கு அனுப்பும்படியாக ரேனியஸ் கொடுத்த மன்னிப்பு

கடிதத்தை லண்டன் சி .எம். எஸ். தாய் சங்க கமிட்டிக்கு அனுப்பாமல் மறைத்து வைத்த சென்னை சி.எம். எஸ் கமிட்டி செயலாளர் J. டக்கர் அவர்களது செயல்பாட்டை நாம் என்னவென்று சொல்வது? Rev. பெற்றிட், J. டக்கர் ஆகியோர்களின் செயல்பாடு காரணமாக ரேனியஸ் நீக்கம் மூலம் அதுவரை ஏற்பட்ட மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் அப்படியே நின்று போனது இதில் பெரிதும் பாதிக்கப்பட்டது மேற்கு திருநெல்வேலி சபைகள்.

மன உளைச்சல் மற்றும் இடைவிடா ஊழியத்தால் ஏற்பட்ட உடல்நலக் குறைபாடு காரணமாக கனம். ரேனியஸ் ஐயர் அவர்களும் மூன்று ஆண்டுகளுக்குள்(1835 -1838) மரணமடைந்தது மாபெரும் ஊழிய இழப்பைத் திருநெல்வேலிக்கு கொடுத்தது என்றால் மிகையாகாது .

ஆதலால் இழந்த வரலாறுகளை மீண்டும் கட்டியெழுப்ப இந்த திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் உதவும்.

இச்சங்கம் திருநெல்வேலி மாவட்டம் மட்டுமல்லாது தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளின் கிறிஸ்தவ வரலாற்றையும் மீட்டெடுக்கும் பணிக்கு மிக உறுதுணையாக நிற்கும். நாம் இணைந்து உழைப்போம். ஆண்டவருடைய பேரருளால் மாபெரும் வெற்றியைப் பெறுவோம்.

ஆண்டவராகிய ஏசு கிறிஸ்து தாமே நம்மோடு இருந்து தூய ஆவியானவர் மூலமாக நம்மை பலப்படுத்தி வழி நடத்துவாராக

அன்புடன் இதழாசிரியர்
J. ஜான் ஞானராஜ்

## படைப்புகளை அனுப்புவோர் கவனத்திற்கு...

- படைப்புகளை அனுப்புவோர் நகல் எடுத்துக் வைத்துக்கொண்டு அனுப்பவும்.
- படைப்புகளை மின்னஞ்சல் மூலமாக அனுப்புவது மட்டுமே அனுப்ப வேண்டும். பிரசுர விபரம் 60 நாட்களில் தெரிவிக்கப்படும்.
- மொழிபெயர்ப்புகளை அனுப்புவோர் மூலத்தின் ஒளிநகலையும் இணைக்க வேண்டும்.
- மின்னஞ்சலில் படைப்புகளை அனுப்புவோர் பிரதி மாதம் 15ம் தேதிக்குள் அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
- படைப்புகளை அனுப்புவோர் முழு முகவரியும் உங்களுடைய முழு பெயர், மின்னஞ்சல் முகவரி, புகைப்படம், தொலைபேசி எண் மறக்காமல் குறிப்பிட வேண்டும்.
- சந்தா தொடர்பான விபரங்களுக்கு 04633 290401 +91 9176780001, +91 7538812218
- விளம்பரங்களை பிரசுரிக்க ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.

கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4),வடக்குத்தெரு,
பங்களா சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (திருநெல்வேலி)
மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
தொலைபேசி: +91 9176780001, +917538812218

# எருசலேம் என் ஆலயம்



● Andrew Ratana Singh
Chennai



ஒவ்வொரு வருடமும், கிறிஸ்து பிறப்பின் பண்டிகையைக் கொண்டாட, எங்கள் சொந்த ஊரான திருநெல்வேலி, சமாதானபுரத்திற்குச் செல்வது வழக்கம். டிசம்பர் 25 கிறிஸ்து பிறப்பின் பண்டிகைக்குப் பின்னர், 26 முதல் 31 வரை தினமும் மாலை, தேவாலயத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள், சிறுவயது முதல் நான் மகிழ்ந்து பங்குபெறும் ஒரு பண்டிகைக் காலக் கொண்டாட்டம்.

ஒவ்வொரு நாள் மாலையிலும், ஓய்வுநாள் பாடசாலை, பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் ஐக்கிய சங்கம், ஆண்கள் ஐக்கிய சங்கம், ஆகிய சங்கங்களின் சிறப்பு நிகழ்ச்சிகள், விசேஷித்த பண்டிகை காலக் கன்வென்ஷன் கூட்டங்கள் என்று வரிசையாக மாலை நேரக் கொண்டாட்டங்களுடன் கிறிஸ்து பிறப்பின் திருவிழா களைகட்டும்.


இக்காலத்தில், பல்வேறு ஊர்களில், தேசங்களில் இருக்கும் திருச்சபையின் மக்கள் பெரும்பாலும் ஊர் வந்து சேர்ந்து, ஆலயத்தின் இந்த பண்டிகை காலக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வது ஆண்டாண்டு காலமாய் தொடர்ந்து வரும் ஒரு நிகழ்வு. இப்படியான கொண்டாட்டங்கள் முடிந்து புதுவருட ஆராதனையையும் முடித்து, அந்த ஒருவாரக் கொண்டாட்டங்களின் இனிய நினைவுகளுடன் தத்தமது ஊர்களுக்கு திரும்பிச் செல்வோம்.

சிறுவயதில், இந்த கொண்டாட்ட மனநிலையுடன் புதுவருட ஆராதனையில் பங்குபெறும் ஒவ்வொரு முறையும், ஆராதனையில் பாடப்படும் ஒரு பாடல் என் மனதில் ஒரு கலக்கத்தையும் திகிலையும் ஏற்படுத்தியிருக்கிறது. 'ஏன் இத்தகைய வரிகள் கொண்ட பாடலை ஒரு புதிய வருடத்தைத் துவக்கும்போது நம் ஆலயங்களில் பாடுகின்றனர்?' என்று சோர்வுற்ற காலங்கள் உண்டு. அந்தப் பாடல் நம் கிறிஸ்து சபை பாமாலை புத்தகத்திலிருக்கும் 'இன்னோர் ஆண்டு முற்றுமாய்' பாடலாகும். அதன் மூன்றாவது சரணத்தில்,

*"யாரேனும் இல்வாண்டினில்*
*சாவின் பள்ளத்தாக்கினில்*
*செல்லின், உந்தன் கோலாலே*
*தேற்றும், நல்ல மேய்ப்பரே"*

என்று பாடியே நாம் வருடத்தைத் துவக்குகிறோம். ஒவ்வொரு முறையும் இந்த வரிகளைக் கேட்கும்போது மனது பாரமாக உணரும். வருடத்தின் துவக்கத்தில் நின்று கொண்டு சாவைக் குறித்த இந்தப் பாடலை ஏன் நாம் பாடுகிறோம்?" என்ற கேள்வி சிறிய வயதில் மனக்கலக்கத்தை ஏற்படுத்தியதுண்டு.

பின்னர், வளர்ந்து வாலிபப் பருவம் கடந்த பின்னர், ஆண்டவரைக் குறித்தும், கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்த நோக்கத்தைக் குறித்தும், அவர் பாடு மரணத்தின் காரணங்கள் குறித்தும், வேதத்தை வாசித்து, அருளுரைகளைக் கேட்டுத் தெளிவு பெற்றபின்பு, இந்த பயம் மனதிலிருந்து அகன்றுபோய்விட்டது.



நித்திய வாழ்வின் நம்பிக்கை மனதில் வேரூன்றப்பட்டு இருந்ததன் காரணமாகவே நம் முற்பிதாக்களால் மரணத்தைப் பற்றிய எந்த அச்சமுமின்றி, ஒரு வருடத்துவக்கத்திற்கான பாடலிலும் கூட, இத்தனை அழகிய வரிகளை உறுதியுடனும் மகிழ்வுடனும் எழுதமுடிந்தது என்பதும் விளங்கியது.

இதன்பின்னர் நம் **தென்னிந்தியத் திருச்சபை ஆராதனை முறைமை**யினை கொஞ்சம் ஆழமாகப் பார்க்கத் துவங்கியதில் இந்த "மரணம்" என்கிற ஒரு விஷயம், நம் ஆராதனை ஒழுங்கின் ஒவ்வொரு பகுதியிலும் எத்தனை அழகாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது புரிந்தது

> “ கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு 'மரணம்' என்று சொல் எவ்வித அச்சத்தையும் தருவதில்லை

'**திருமணம்**' எனும் பந்தம் இவ்வுலகவாழ்வில் ஒரு மகிழ்விற்குரிய, 'மங்கல' நிகழ்வாகவே கருதப்படுகிறது. கிறிஸ்துவைப் பற்றி அறிந்திராத நம் பிற சமய சகோதரரின் திருமணங்களில் யாரேனும் 'தும்மல்' போட்டுவிட்டால் கூட அது ஒரு 'அமங்கல'க் குறியீடாகவே கருதப்பட்டு வருகிறது. இப்படியிருக்க, நம் கிறிஸ்தவ திருமண ஆராதனை ஒழுங்கில், மணமக்கள் தங்கள் வாக்குறுதிகளை ஆண்டவர் சந்நிதியில் பரிமாறிக்கொள்ளும்போது, 'வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், 'மரணம் நம்மைப் பிரிக்கும்வரை' என்று கூறித் தம் இல்லற வாழ்வைத் துவக்குகின்றனர். திருமணம் போன்ற ஒரு 'மங்கல' நிகழ்வின் ஆராதனை ஒழுங்கில், மணமக்கள் தங்கள் இல்லற வாழ்க்கையைத் துவக்கும் தருணத்தில் 'மரணம் நம்மைப் பிரிக்கும்வரை' என்று வாக்குறுதி அமைக்கப்பட்டிருப்பது, கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு 'மரணம்' என்ற சொல் எவ்வித அச்சத்தையும் தருவதில்லை என்பதை எத்தனை அழகாய்க் காட்டுகிறது!

மரணத்தை வெற்றிகொண்ட ஜீவனுள்ள தேவனைத் தொழுதுகொள்ளும் நாம், 'மரணம்' என்ற சொல்லைக்கண்டு அஞ்சுவதோ, 'பரம வாழ்வின்' மகத்துவத்தை தியானிக்கவும், நித்திய வாழ்வின் உறுதியைப் பாடலாகப் பாடவும் தயங்குவதோ, எத்தனை பெரிய அறியாமை!

நம் திருச்சபையின் திடப்படுத்தல் ஆராதனை முறைமையிலும் பேராயர் திடப்படுத்தல் பெறுபவரின் தலையில் கைவைத்து 'கர்த்தாவே, இந்த உம்முடைய பிள்ளை என்றைக்கும் உம்முடையவனா(ளா)ய் இருக்கவும், உமது நித்திய ராஜ்ஜியத்தில் சேருமளவும் நாள்தோறும் உம்முடைய பரிசுத்த ஆவியில் வளர்ந்தேறவும், உமது பரம கிருபைகளால் இவனை(ளை)க் காத்தருளும்" என்றே ஜெபித்து திடப்படுத்தல் செய்து வைக்கிறார்.

நம் ஞானஸ்நான ஆராதனை முறையிலும், 'பாவத்துக்கு மரித்து, நீதிக்குப் பிழைத்து, கிறிஸ்துவின் மரணத்துக்குள் அவருடனேகூட அடக்கப்பண்ணப்பட்டிருக்கிற இவன், தன்னிலுள்ள பழைய மனுஷனைச் சிலுவையில் அறைந்து, பாவசரீரத்தை முற்றிலும் அழிக்கவும், இவன் உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனாய் இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனாய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய ராஜ்ஜியத்துக்குச் சுதந்தரவாளியாகவும் தேவரீர் கிருபை செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்" என்ற அர்த்தமுள்ள ஜெபம் கொடுக்கப்பட்டுள்ளது.

'..மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகுமென்று காத்திருக்கிறேன்' என்ற வரிகளை உச்சரிக்க ஒவ்வொருமுறை நாம் விசுவாசப்பிரமாணம் சொல்லும்போதும் பயப்படுகிறோமா?

இப்படி 'மரணம்' என்பது கிறிஸ்தவ

வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் / நிகழ்விலும் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், 'நித்திய வாழ்வின்' நிச்சயத்தை உணர்த்தும் அநேக பாமாலைகள்/பாடல்கள், தமிழ் கிறிஸ்தவர்களால் தொடர்ந்து மறுதலிக்கப்படுவது / புறக்கணிக்கப்படுவது, மோட்சத்தைக் குறித்த அப்பாடல்கள் 'மரணப் பாடல்கள்' என்று வகைப்படுத்தப்படுவது எத்தனை வேதனைக்குரிய காரியம்?

'Some Glad Morning' என்ற Jim Reeves பாடிய Cassette / CD ஒலித்திராத நம் கிறிஸ்தவ இல்லங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். "Some glad morning when this life is o'er, I'll fly away' என்று எவ்வளவு மகிழ்வுடன் அவர் பாடுகிறார்! அவ்வளவு உற்சாகத்துடன் அவர் அப்படிப் பாட, பரம வாழ்வைக் குறித்த நிச்சயம் எத்தனை ஆழமாய் அவர் மனதில் பதிந்திருக்க வேண்டும்!

ஆண்டவரின் இரண்டாம் வருகையை சந்திக்க எந்நேரத்திலும், எந்நிலையிலும் ஆயத்தமாய் இருக்கும் நிலையை நம்மால் அடைய முடிந்தால், 'மோட்சத்தை / நித்திய வாழ்வைக் குறித்த பாடல்களைப் பாட பயமோ தயக்கமோ எப்படி ஏற்படும்?

'எருசலேம் என் ஆலயம்', 'என்றும் கர்த்தாவுடன்', 'பிளவுண்ட மலையே', 'என்னோடிரும் மா நேச கர்த்தரே', 'உம்மண்டை கர்த்தரே' என்று இப்படி நம் திருச்சபை ஆராதனைகளிலும், குடும்ப ஜெபங்களிலும், புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அழகிய பொருள் நிறைந்த பாடல்கள் எத்தனை எத்தனை!

இந்நாட்களில் மரித்தோர் வீடுகளிலும் மற்றும் அடக்க ஆராதனைகளிலும் மட்டுமே இத்தகைய பாடல்கள் பாடப்படுகின்றன என்பது எத்தனை வேதனைக்குரிய விஷயம். தன் மரணத்தையோ, ஆண்டவரின் இரண்டாம் வருகையையோ சந்திக்க ஆயத்தமில்லாத, பல கிறிஸ்தவ மக்களுக்கு மரண பயத்தையும், திகிலையும் ஊட்டும் சாவுப்பாடல்களாக இவை மாறியிருப்பது எவ்வளவு வேதனைக்குரிய காரியம். ஆனால் பரலோகத்தை அழகாகச் சித்தரிக்கும் இப்பாடல்கள் இரட்சிப்பின் அனுபவம் பெற்றவர்களுக்கு, நித்திய வாழ்வின் நம்பிக்கையூட்டுவதாக விளங்குகிறது.

நம் பாடல் புத்தகங்களில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், நம் திருச்சபை ஆராதனை ஒழுங்கில் உள்ள ஒவ்வொரு வாக்கியமும், நம் திருச்சபை ஜெப புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு விண்ணப்பமும், நம் முற்பிதாக்கள் சிரத்தையாக ஜெபித்து, உபவாசித்து, ஆண்டவரைத் தியானித்து உருவாக்கி நமக்குத் தந்து சென்றிருக்கும் பொக்கிஷங்கள். இவற்றின் அருமையையும், பொருளையும் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்?

பக்தி சிரத்தையுடன், தேவபயத்துடன் ஒரு திருச்சபையாய் இணைந்து நம் கல்வாரி நாதரை ஆராதிப்பதற்கென்று நமக்கு அருளப்பட்டிருக்கும் இந்த ஆராதனைகளில், பொருள் நிறைந்த பாடல்களில் நாட்டமின்றி, அசட்டை செய்து, ஆட்டமும், பாட்டமும், வண்ண விளக்குகளும், புகையும் நிறைந்திருக்கும் பல்வேறு இடங்களை நாடி சிதறி ஓடிக்கொண்டிருக்கும் நம் வாலிபப் பிள்ளைகளுக்கு நம் திருச்சபையினைப் பற்றியும், இத்திருச்சபையின் ஆராதனை ஒழுங்கின் முக்கியத்துவம் பற்றியும், ஆராதனையில் பாடப்படும் பாடல்களின் வரலாறு குறித்தும், அப்பாடல் பிறக்கக் காரணமாயிருந்த பாடலாசிரியர்கள், கடவுளுடன் கொண்டிருந்த அன்பின் ஐக்கிய உறவின் வெளிப்பாடாக அமைந்த இப்பாடலின் பொருள் நிறைந்த வரிகளைக் குறித்தும் விளக்கி உணர்த்த வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உள்ளதல்லவா? நித்திய வாழ்வின் நிச்சயம் நம் மனதில் வேறூன்றிவிட்டால், இப்பாடல்களை வாழ்வின் எந்த ஒரு நிலையிலும், எவ்வொரு நிகழ்விலும், மகிழ்வுடன் பாட நம் மனது தயக்கம் கொள்ளாதல்லவா?

நம் அன்பின் ஆண்டவர், நம் முற்பிதாக்களாகிய விசுவாசிகளின் மூலம், நமது கரங்களில் கிருபையாய் தந்திருக்கும் இந்த அருளின் ஈவை, நம் அடுத்த தலைமுறை-யினர்க்கு விளக்கி எடுத்துச் சொல்லிப் பாதுகாப்போம்.

நம் பாடல் புத்தகங்களில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், நம் திருச்சபை ஆராதனை ஒழுங்கில் உள்ள ஒவ்வொரு வாக்கியமும், நம் திருச்சபை ஜெப புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு விண்ணப்பமும், நம் முற்பிதாக்கள் சிரத்தையாக ஜெபித்து, உபவாசித்து, ஆண்டவரைத் தியானித்து உருவாக்கி நமக்குத் தந்து சென்றிருக்கும் பொக்கிஷங்கள்.





Mr. A.P.T. Gnanaraj
Nazareth

# பேயை வென்ற ஜெபம்! வழி காட்டிய பேரொளி!

(Rev P. S. Peter, Nazareth - 1922)

பீற்றர் ஐயரவர்கள் 'கூண்டு வண்டி' என்று அழைக்கப்படும் மாட்டு வண்டியொன்றை வைத்திருந்தார். வெளி ஊர்களுக்கும், பஜனை ஊழியங்களுக்கும் அவர் அவ்வண்டியிலேயே பயணம் செய்வது வழக்கம். அவர் செல்லும்போது தம் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் தம்முடன் சேர்ந்து பாடவும், வாத்தியங்கள் இசைக்கவும் அழைத்துச் செல்வார்.

ஐயரவர்கள் குருவானவராக பணியாற்றிய நாட்களில் நிகழ்ந்த உண்மை சம்பவத்தை பீற்றர் ஐயரவர்கள் தன் பேரப்பிள்ளை A. P. T. ஞானராஜ் அவர்களுக்கு சாட்சியாக சொன்னதை இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

பீற்றர் ஐயரவர்கள் தமது வழக்கத்தின்படியே, கூட்டாம்புளியில் இருந்து தனது குடும்ப பஜனைக் குழுவினருடன் கூண்டு வண்டியில் ஊர் திரும்பும் போது வண்டி வழித்தடத்திலிருந்து சற்று விலகி குளத்திலிருந்த பனைமரங்களுக்கிடையே சென்றது. கும்மிருட்டான இரவா-யிருந்தது. சுமார் 12 மணி அந்த இரவிலும், பனைமரம் ஒன்றில் விளக்கு வெளிச்சத்தில் பாளையிடுக்கும் சப்தம் கேட்கவே, வண்டியோட்டி, "பனையேரியாரே வழித்தடம் எங்கேயுள்ளது? " என்று வினாவினார். பனையேரிஅளித்த பதிலில்வழி புலப்படாமல் போகவே, மீண்டும் மீண்டும் பனையேரியாரை பாதை புரியும் படி கேட்டார். பனையேறி கூறியபடியே வண்டியை ஓட்டினான். ஐயரவர்கள் வண்டியில் அமர்ந்திருந்தவாரே ஜெபம் செய்து கொண்டிருந்தார்.

அச்சமயம் திடீரென்று பளிச்சென ஒரு மின்னல் ஆச்சரியமாக மின்னியது. அது மின்னல் அடிக்கக் கூடிய மழைக்காலமும் அல்ல! கோடையிடி தோன்றும் சமயமும் அல்ல! மின்னல் வெளிச்சத்தில் வண்டியோட்டி சடக்கென்று வண்டியை நிறுத்தினான். வண்டிக்கு மிக அருகில் இரண்டு மூன்றடி தூரத்தில் தரைமட்டமான ஓர் பாழ்கிணறு காணப்பட்டது. வண்டியோட்டி அதிர்ந்து போய், ஐயா வண்டிக்கு முன்னால் ஒரு பாழ்கிணறு இருக்கிறது, எல்லாரும் உடனே இறங்குங்கள் என்றான். அங்கு பனயேறியை காணாமல் வண்டியோட்டி திகிலடைந்து, பேய், பேய் என்று கத்தினான். ஐயரவர்கள் இறங்கி பார்த்தபோது சற்று தூரத்தில் வண்டிப்பாதையுள்ளது தென்பட்டது.

தங்களைத் **திசைமாற்றி வழி காட்டினது சாத்தானேயென்றும், அந்த மின்னல் கர்த்தர் அனுப்பிய பேரொளியே** என உணர்ந்து அந்த பாழும் கிணற்றில் விழாமல் காப்பாற்றிய கர்த்தரைத் துதித்துக் கொண்டு பத்திரமாக வீடு சேர்ந்தார்கள்.

இணைக்கப்பட்டுள்ள கூண்டு வண்டியின் மாதிரி உருவம் A. P. T. ஞானராஜ் அவர்களின் பேத்தியின் கற்பனையில் உதித்தது.

## Prayer to conquer the devil!
## The Bright Light that Showed the Way!

English Version

*An incident that Rev. P.S. Peter had...*

*Rev. P.S. Peter had a bullock-cart, which was also called 'cage cart'. He traveled regularly to other cities and towns and conducted preaching with singing (bajans). He would take his children and grandchildren to sing along with him or to play musical instruments in accompaniment.*

*Rev.Peter's grandson A. P. T. Gnanaraj has narrated the following real incident that happened during the time, when he was a preacher, as a testimony to his grandchildren.*

*Rev. P.S. Peter, as was his custom, was returning one night in his cage-cart with his family members from a place called Kuttampulli, when the cart pulled away from the usual path and went in between the palmyra trees into an unknown area. It was pitch dark. But even at that time at about 12 o'clock that night, they heard the sound of a palmyrah tree-climber working away on a palmyra tree, using the light of a lamp.*

*The cage-cart driver asked the tree-climber seated on top of the tree: "Tree-climber sir, where is the route for my cart?" The tree-climber answered but those below couldn't hear him. So the cart driver asked him again and again, till he understood the route. So he drove the cart as told by the tree-climber. Rev. P.S. Peter was seated inside the cart, praying.*

*Then suddenly there was a flash of lightning, which was surprising, since it is not the rainy season! It was not the time, when they had rains during the summer season either!*

*Because of the sudden lightning bolt, the cart-driver stopped the cart with a jolt! The cart-driver got a shock when he saw what was in front of the cart. He said: "Sir, there is a ruined well just in front of us. All of you, please get down immediately!" When he noticed that the palmyrah tree-climber disappeared from the tree, the cart-driver became scared and started screaming: "The devil, the devil, the devil"! When they all got down, they saw a path for the cart at a distance.*

*They realized that it was the devil indeed, who had showed them the wrong path. They praised God, when they realized it was He who had sent them a lightning and had protected them from falling into the ruined well, and got back home safe.*

*The model of the cage- carriage here has been made as imagined by A. P. T. Gnanaraja's granddaughter.*

Translated by Hannah Gunasingh

# ஜுன் மாதம் பிறந்த நாள் கொண்டாடும் மிசனரிகள்,குருமார்கள் மற்றும் பாடலாசிரியர்கள்

- Joseph Devasahayam Vedakkan
- Henry James Schaffter
- Alexander Silver
- Bakkianadan Abraham Gnanasigamani
- Devasugayam Gnanasigamani
- Pakkthsing
- Smith Wigglesworth
- Samuel Savarimuthu
- Rajanayagsm Vedanayagam Asirvad-am
- Muthuswami Frederick
- Selvanayagm David
- Swanikalai Paul Manickam
- Aaron Vetharatnam Robert Simon
- Vadivelu Samuel
- Samuel Paul Iyer
- P Samuvel
- Abraham Samuel Vores
- Solomon Duraisamy
- Gnanamuthu Eleazar
- Eben Azariah
- John Jesudoss Asirvatham
- Dr Hilda Magaret Pollard
- DR Rees Myfanwy Dyfed
- Arthur Michael Hollis
- Sister Grace Violet Aaron
- Mrs Rosetta Jane Jolly
- Paul Sundaram Kadambavanam
- Gurubadam, Devadason
- Vedanayagam Abraham
- John Smith
- David Fenn
- Vedamanikkam,Dare
- Arulanandam Manikkam

# ஜுன் மாதம் நினைவு நாளை ஆசரிக்கும் மிசனரிகள்,குருமார்கள் மற்றும் பாடலாசிரியர்கள்

- Swmindian David Maduram
- Joseph Devasahayam, Vedakkan
- Swamidason Vedamanickkam
- Mark daniel pande
- John Enight Arumanayagam
- **Charles Theophilus Ewald Rhenius**
- Periyanagam Arumanayagam
- Panl Edward Devadason
- John Stephenson
- David Vedanayagam
- Robert Ponniah Peter
- William Carey
- George Walton
- Arthur Joseph Godden
- Ada Lee
- Devapiriam Vedamuthu
- Visuvasam Gnanamuthu
- William Hickey
- Jessiman Brand
- John Michael Lechler
- Christopher moses
- Henry Constatine Huxtable
- Antonimuthu Manuel
- Mrs Rosetta Jane Jolly
- Jacob Joseph
- Diraviam Koilpillal
- Pakkianathan Gnanayutham
- Paramanandam Gnanakkan,Simeon
- Thomas Vedanayagam
- Daniel Devaprasadam
- Pakkianathan David
- John Yesudian Paramanandam
- Daniel Savarirayan, Joseph
- Maduranayagam Gnanakkan
- P Samuvel
- Frederic Ray Wansbrough

# முன்னோரை தேடி ....

**களப்பணியில் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம்**



## 68 ஆண்டுகளுக்கு முன்பு திருமறையூர் இறையியல் கல்லூரியில் முதல்வராக பணி செய்து இம்மண்ணில் மறைந்த போதகர் டி.சி. விட்னி கல்லறையை தேடி வந்த வாரிசுகள்:

• நாசரேத்

1913-ஆம் ஆண்டு மத போதகர் பணிக்காக போதகர் டி.சி. விட்னி என்பவர் இங்கிலாந்தில் இருந்து ஈரோடு பகுதிக்கு வந்தார். 1914-ஆம் ஆண்டு போதகர் டி.சி.விட்னியும் டாக்டர் ரீஸ் என்பவருடன் ஈரோட்டில் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு ஆலன் விட்னி என்ற மகன் பிறந்தார்.

1924-ஆம் ஆண்டு போதகர் விட்னிக்கு பணியிட மாறுதல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அங்கிருந்து நெல்லை, தூத்துக்குடி பகுதிகளுக்கு பணியிட மாறுதல் ஆகி மதபோதக பணி மற்றும் மருத்துவ சேவைப்பணியில் ஈடுபட்டு வந்தனர். தூத்துக்குடி பகுதியில் பணியில் இருந்த போது போதகர் விட்னி 1952 ம் ஆண்டு திருமறையூரில் காலமானார். அதைத் தொடர்ந்து டாக்டர் ரீஸ், ஆலன் விட்னியும் இங்கிலாந்து சென்றுவிட்டனர்.

> **சுமார் 20 ஆண்டுகளாக தேடிவந்த நிலையில் திருநெல்வேலி கிறிஸ்டியன் வரலாற்று சங்க குழுவினரால் போதகர் விட்னியின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது.**

போதகர் விட்னியின் பேரன் சைமன் விட்னி, பேத்தி பென்னி ஸ்மித் ஆகியோர் அவருடைய கல்லறையை சுமார் 20 ஆண்டுகளாக தேடிவந்த நிலையில் திருநெல்வேலியில் பல்வேறு திருச்சபை வரலாற்று செய்திகளை இளம் தலைமுறைக்கு எடுத்து சொல்லி கொண்டு இருக்கும் திருநெல்வேலி கிறிஸ்டியன் வரலாற்று சங்கத்தின் செயலர் மன்னா செல்வகுமார் அவர்களை தொடர்பு கொண்டு போதகர் டி.சி.விட்னியின் கல்லறையை கண்டறிந்து தருமாறு சேலம் வரலாற்று குழுவினர் கேட்டனர்.

அதை தொடர்ந்து திருநெல்வேலி கிறிஸ்டியன் வரலாற்று சங்க குழுவினர் மன்னா செல்வகுமார் திருமறையூர் ஆபிரகாம், ரூபன், ஜஸ்டின், அருள்மணி குழு கல்லறையை திருமறையூர், வாழையடி, நாசரேத் பகுதிகளில் பல நாட்களாக கள ஆய்வுகளை மேற்கொண்டனர். நாசரேத் கல்லறை தோட்டத்தில் போதகர் விட்னியின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. பேரன் பென்னி சைமன் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் வந்து கல்லறையில் மலர் வளையம் வைத்து போதகர் விட்னியின் செய்த பணிகளை நினைவு கூர்ந்தார்கள்.

தங்கள் தாத்தா, பாட்டி வாழ்ந்த வீடு, கல்லூரி(தற்போதைய நர்சிங் கல்லூரி), மருத்துவனை, போன்ற இடங்களை பார்த்து தெரிந்து கொண்டனர். பின்னர் திருநெல்வேலி திருச்சபையின் தாய் என்று அழைக்கப்படும் குளோரிந்தாள் நினைவு இடத்தையும் பார்த்து மகிழ்ந்தர்கள். அவர்களை துத்துக்குடி நாசரேத் திருமண்டல பேராயர் அவர்கள் சார்பில் அருட்திரு. DGA தாமஸ் அவர்களும் வரலாற்றாளர் அருள்திரு. ஜெயசீலன் மற்றும் பேராலய தலைமை குருவானவரும் சபை மக்களும், நர்சிங் கல்லூரி சார்பாக அவர்களுக்கு விருந்து அளித்து கவுரவபடுத்தப்பட்டது. இவர்களுடன் ஈரோடு ரமேஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயசீலன், ரத்தினகுமார், சுஜித், K.J சார்லஸ், பீட்டர். பென்னி ஸ்மித் இங்கிலாந்தில் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். சைமன் விட்னி கட்டிட வடிவமைப்பாளராக பணியாற்றி வருகிறார். இவர்களின் பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததாக தெரிவித்தனர்.



பென்னி சைமன் , பென்னி ஸ்மித் அஞ்சலி செலுத்திய போது





திருநெல்வேலி திருச்சபையின் தாய் என்று அழைக்கப்படும் குளோரிந்தாள் நினைவு இடத்தில்

திருச்சபை வரலாறுகள் இப்போது வீடியோ வடிவில்
உங்கள்
Christian Historical TV

# திருநெல்வேலி திருச்சபையின் மூலைக்கற்கள்

> திருநெல்வேலிக்காக நான் வாழ்கிறேன். திருநேல்வேலிக்காக மரிக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன்.
>
> பேராயர். ராபர்ட் கால்டுவெல்



> யார் என்ன செய்தாலும் என்னையும் திருநெல்வேலி மக்களையும் பிரிக்க முடியாது.
>
> ரேனியஸ் ஐயர்

- திருநெல்வேலிக்கு அப்போஸ்தலன் சங்கை ரேனியஸ் ஐயர்
- வட திருநெல்வேலி பகுதிக்கு ராக்லந்த்
- தென் திருநெல்வேலி பகுதிக்கு ஜான் தாமஸ்
- வட கிழக்கு திருநெல்வேலிக்கு கேர்ண்னைஸ்
- கீழ்ப்பகுதிக்கு தாமஸ் டக்கர்
- தென்கிழக்கு திருநெல்வேலிக்கு கால்டுவெல்
- மத்தியபகுதிக்கு திருநெல்வேலிக்கு சார்ஜென்ட்
- வடமேற்குக்கு திருநெல்வேலிக்கு பேரன்புருக்
- மேற்குப் பகுதி திருநெல்வேலிக்கு பால் ஷாப்டர்
- சாயர்புரத்திற்கு போப்
- நாசரேத்துக்கு மர்காஷிஸ்
- கிறிஸ்தியாநகரத்துக்கு பெஸ்ட்
- தூத்துக்குடிக்கு ஷாராக்
- டோனாவூருக்கு உவாக்கர் மற்றும் ஏமிகார்மைக்கல்
- சிவகாசிக்கு மெடோஸ் மற்றும் ராக்லெண்ட்
- கடாட்சபுரத்துக்கு ஜான் தேவசகாயம்



திரு.ஜே.பர்னபாஸ்,**M.Sc.**,
சேலம் வரலாற்றுச் சங்கம்,
சேலம்

# தமிழகத்தின் வரலாற்று தடங்களில் மறைக்கப்பட்ட இடம்

"நாளை இந்தக்கற்கள் ஏதென்று உங்கள் பிள்ளைகள் உங்களை கேட்கும் பொழுது. யோசுவா 4:6

நூலாசிரியர் மணா என்பவர் எழுதிய "தமிழகம் தடங்கள்" என்ற நூலை மீண்டும் ஒருமுறை வாசித்தபோது எனது மனதில் எழுந்த ஆதிக்கத்தின் விளைவே இந்த கட்டுரை

பாளையங்கோட்டை முருகன் குறிச்சிப்பகுதியில் அன்று மிகப் பெரிய திறள் கூட்டம் கூடியது! தமிழியலின் தந்தையும், திருநெல்வேலியின் அப்போஸ்தலனுமான சங்கை இரேனியஸ் ஐயர் (**Rev. C.T.E. RHENIUS - 1790 –1838**) அவர்களின் அடக்கத்திற்கு கூடிய கூட்டம் தான் அது. ஒட்டு மொத்த திருநெல்வேலியே அங்கு கூடியது போல ஒரு மிகப் பெரிய கூட்டதை அவரது மறைவு அங்கு கூட்டியது, கல்லறை தோட்டத்தில் அவருடைய ஜென்ம சரீரத்தை புதைக்க அனுமதி கிடைக்கவில்லை அதனால் வீதியோரதில் விதைக்கபட்டார் சங்கை இரேனியஸ் ஐயர், காலம் மாறியது திருச்சபை தன்னையே திருத்திக் கொண்டது. வீதியோரத்தில் கேட்டபாறச்சு கிடந்த சங்கை இரேனியஸ் ஐயரின் கல்லறையை திருச்சபை தமது கட்டுப்பாட்டில் எடுத்து பாதுகாத்து பராமரித்து வருகிறது இன்று.

> கல்லறை தோட்டத்தில் அவருடைய ஜென்ம சரீரத்தை புதைக்க அனுமதி கிடைக்கவில்லை அதனால் வீதியோரதில் விதைக்கபட்டார் சங்கை இரேனியஸ் ஐயர்

இப்பொழுது, பாளையங்கோட்டை முருகன் குறிச்சியில் உள்ள சித்த மருத்துவ கல்லூரி அருகில் இன்று அங்கு ஐயர் கல்லறை இருக்கும் தெரு இரேனியஸ் ஐயர் தெரு என்றழைக்கப்படுகிறது.

170 ஆண்டுகள் கடந்தும் தனது தன்னலமற்ற சேவைகள் மூலமாக காலத்தைக் கல்வெட்டில் தங்கிருக்கிறார்.

## சுவிசேஷத்தை தைரியமாயும் உண்மையாயும் பிரசங்கித்த சங்கை இரேனியஸ் ஐயர்

இவையெல்லாம் 'தமிழகத் தடங்கள்' என்ற நூலில் 'இரேனியஸ் ஐயர் கல்லறை' என்ற தலைப்பில் கிறிஸ்தவறல்லாத ஒருவர் எழுதியிதிப்பது. ஆனால், சேலம் நகரில் விடப்பட்டு மறக்கப்பட்டு போன எண்ணற்ற வரலாற்று தடங்கள் என் மனவானில் முகில் கூட்டங்களாக தங்கள் உருவத்தைப் பதிக்க.. அவற்றில் இங்கு மறைந்திருக்கிற உண்மையாக, தம்மவர்களால் மறக்கப்பட்டுபோன வரலாற்று உண்மையை இங்கே நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

## இந்தியாவின் முதல் தொழிற் பயிற்சி பயிலகம்

சேலம் நகரில் கோட்டை பகுதிக்கும் செவ்வாய்ப் பேட்டைப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அன்று அமைந்து இருந்தது தான் சேலம் லண்டன் மிஷன் வளாகம் இந்த சேலம் லண்டன் மிஷன் வளாகத்தின் மேற்க்கு பகுதியில் கி பி 1840 -ஆம் ஆண்டு சங்கை **J.M.**லெக்லர் ஐயர் அவர்களால் இந்தியாவின் முதல் தொழில் பயிற்சி பயிலகம் துவங்கப்பட்டது.

முதலில் தையல் தொழில் பயிற்சி மற்றும் தச்சு தொழில் பயிற்சி ஆகியவை கற்றுத்தரப்பட்டன. பின்னர் கட்டிட வேலை, செங்கல் செய்தல் மற்றும் இரும்பு வேலை போன்ற வேலைக்கான பயிற்சி வகுப்புகள் சங்கை **J.M.**லெக்லர் மேற்பார்வையில் கற்றுத்தரப்பட்டன.

இரும்பு வேலை பிரிவில் சேலம் கஞ்சமலையிருந்து வெட்டி எடுத்து வரப்பட்ட இரும்புத்தாதுவை பொடி

செய்து கரியுடன் கலந்து ஊது உலை முறையில் உருக்கி வார்பிரும்பு செய்யும் கடினமான பயிற்சியும் இருந்தது. கட்டிட வேலை பிரிவுக்கும் இரும்பு வேலை பிரிவுக்கும் ஜெர்மானிய பொறியாளர்கலான திரு. கார்ல்ராம் **(Mr. CARLRAHM)** மற்றும் திரு. போஸிங்கர் **(Mr.BOSINGER)** ஆகியோரை மேற்பார்வையாளராக சங்கை **J.M.**லெக்லர் ஐயர் நியமித்தார், இவர்கள் இருவரும் ஐரோப்பிய **BASEL MISSION** ஸ்தாபனத்திலிருந்து இந்தியா வந்தவர்கள்.

### உலோக உருக்காலை ( FORGE )

இரும்பு வேலைப் பிரிவின் மேற்பார்வை பொறியாளர் திரு. போரிங்கர் தொழில் பயிற்சி பயிலகம் அருகிலேயே ஒரு உலோக உருக்காலையே அமைத்திருந்தார். அங்கு கலைபொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் இதர இரும்பு சாமான்களையும் செய்து வந்தார். இவடைய உலோக உருக்காலை **BOSINGER FORGE** என்று அழைக்கப்பட்டது. அந்த வினோதத்தைக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள் என்று **W** விட்னி ஐயர் தனது "**A HUNDRED YEARS OF SALEM MISSION HISTORY**" நூலில் குறிப்பிடுகிறார்.

> "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற தொல்காப்பிய வரிகள் ஆறுதல் அளித்தாலும், பழையன பாதுகாக்கபட வேண்டியவையே"

### புகழ் பெற்ற கட்டிட வேலைப் பிரிவு (MASONRY )

ஜெர்மானிய பொறியாளர் திரு. கார்ல் இராம் அவர்களின் மேற்பார்வையில் கட்டிடவேலைப் பிரிவு செயல்பட்டது, செங்கல் செய்தல் மற்றும் ஓடு செய்தல் ஆகியவை உள்ளடக்கியதாக கட்டிட வேலை பிரிவு-யிருந்தது. பொறியாளர் திரு.கார்ல் இராம் அவர்களின் முன்முயற்சியால் ஓடு செய்தல் பிரிவு உருவாக்கப்பட்டது. **BASEL MISSION** தொழில் நுட்பத்தில் நல்ல தரமான ஓடுகள் பயிலக வளாகத்தில் தயாரிக்கப்பட்டது இங்கு தயாரிக்கப்பட்ட செங்கற்களுக்கும், ஓடுக்கும் அப்பொழுது சேலத்தில் நல்ல கிராக்கி இருந்தது.



### தையல் மற்றும் தச்சு வேலை பிரிவுகள்

தையல் தொழில் பயிற்சி பயின்றவர்கள் சுயமாக தொழில் துவங்க வழி ஏற்பட்டது. பல மாணவர்கள் அரசின் பணிகளில் சேர்த்து கொள்ளப்பட்டனர். தச்சு வேலை பிரிவில் பயின்றவர்கள் சுயமாக தொழில் செய்து பிழைக்க சுயதொழில் வாய்ப்பு பெற்றனர். ஆங்கில அரசின் பணிகளிலும் சேர்த்து கொள்ளப்பட்டனர். மேலும் தச்சு வேலை பிரிவில் உருவாக்கப்பட்ட பெஞ்சு, நாற்காலி,மேசை ஆகியவையும் மற்ற தச்சு வேலை சாமான்களை தனியார் மற்றும் ஆங்கில அரசாங்கமும் வாங்கி கொண்டன..

### விடுதி வசதி

இங்கு சேலம், திருநெல்வேலி, திருவாங்கூர் சமஸ்தானம், சென்னை போன்ற அனைத்து மிஷன் ஸ்தாபனத்திலிருந்தும் மாணவர்கள் வந்து பயின்று வந்தனர். அவர்கள் தங்கி தொழில் பயிற்சி பெறுவதற்கு விடுதி ஒன்று முதன் முதலில் தொழில் பயிற்சி வளாகத்தில் கட்டப்பட்டது. விடுதியில் தங்கி பயிலும் முறையும் சேலம் நகரில் அப்பொழுது தான் முதல் முதலாக சங்கை சங்கை **J.M.**லெக்லர் ஐயரால் ஆரம்பிக்கப்பட்டது..

### தொழிற்பயிற்சி பயிலகத்தின் மணிமுடி படைப்பு

சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயர் (**REV. HENRYCRISP L.M.S -1803-1831**) சேலம் மிஷன் வளாகத்தின் வட மேற்கு பகுதில் கி.பி 1831 ஆம் ஆண்டு கட்டிய சிற்றாலயம் வளரும் திருச்சபையின் தேவைகளுக்கு போதுமானதாக இல்லை. எனவே வருங்கால வளர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு ஒரு பெரிய தேவாலயம் சேலம் நகருக்கு தேவை என்பதை உணர்ந்த சங்கை **J.M.**லெக்லர் ஐயர் அதற்க்கான முயற்சிகளை தொடங்கினர். புதிய ஆலயத்திற்கான அஸ்திபாரம் கி.பி. 1852 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் போடப்பட்டு பணிகள் துரிதமாக நடந்துவந்தது. தொழில் பயிற்சி பயின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், திருச்சபை மக்களும் இணைந்து பணிகளை மேற்கொண்டனர். சங்கை

J.M.லெக்லர் ஐயரின் தலைமையின் கீழ் திரு. கார்ல் இராம், மற்றும் திரு. போசிங்கர் ஆகியோரின் மேற்பார்வையில் பணிகள் நடைபெற்றது. தேவாலயத்திற்கான மணி இங்கேயே போசிங்கர் உருக்காலையில் வார்க்கப்பட்டு உருவாக்கப்பட்டது. தேவாலய கண்ணாடிகள் தவிர மற்றவை அனைத்தும் இந்த தொழிற் பயிற்சி பயிலகத்திலே தயாரிக்கப்பட்டது. ஆலயத்திற்கு தேவையான கண்ணாடிகள் மட்டும் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்டது என்று "கெஜட்டியர் ஆப் தி சேலம் டிஸ்ட்ரிக்" தெரிவிக்கிறது. அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில் கி.பி .1853 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் நான் திருநிலைப்படுத்தப்பட்டு திறக்கப்பட்டது.



சங்கை J.M.லெக்லர் ஐயர் தம்முடைய விடுமுறை காலத்தில் (FURLOUGH) ஐரோப்பியா சென்று திரும்பிய பொழுது தேவாலயத்தை பக்க வாட்டிலும், முன்பக்கத்திலும் விரிவாக்கம் செய்து பணிகள் அனைத்தும் முடிந்ததை அறிவிக்கும் வகையில் மறு அர்ப்பணிப்பு செய்து தேவாலயம் மீண்டும் திறக்கப்பட்ட ஆண்டை தேவாலய முற்றத்தின் (PORCH ) முகப்பில் '1856' என்று பொறித்து வைத்தார் இந்த கல்வெட்டு பற்றி சங்கை T C விட்னி ஐயர் தனது நூலிலும் குறிப்பிட்டுள்ளார்.

### எச்சங்களும் மிச்சங்களும்

எல்லாம் கொஞ்ச கொஞ்சமா அழிந்து போகின்றன என்றாலும் சாசுவதமாக நினைநிலைப்பது ஒரு சில கல்மாறிகளாக (FOSSILS) காலத்தால் பாதுகாக்க படுவதிலிருந்து, காலகாலமாக மனிதர்களால் பதுகாக்கப்படுவதும் தப்பி பிழைக்க போராடஞ்.. இப்படியாக எஞ்சி நிப்பது அந்த கால எச்சங்களும், மிச்சங்களும்தான். மனிதன் பேராசை, அறியாமை மற்றும் எடுத்து சொன்னாலும் புரியமை ஆகியவற்றினால் தினம் தினம் இடிக்கப்பட்டு, மறைக்கப்பட்டும் போகும் நினைவு சின்னங்களை யார் காப்பாற்ற முடியும்? பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற தொல்காப்பிய வரிகள் ஆறுதல் அளித்தாலும், பழையன பாதுகாக்கபட வேண்டியவையே.

அன்று சேலம் - ஈரோடு ஒலவக்கோடு வரையிலான இருப்புப் பாதை பணிகள் கி.பி 1856ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கிபி -1861 ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. சேலம் தொழிற்பயிற்சி பயிலக மாணவர்களின் பணிகள் அதில் மறைந்திருக்கிறது.

அதைப் போலவே, MADRAS RAILWAY COMPANY யின் நிர்வாக பொறியாளர் திரு. ஜான்பார்டாக் (Ex . JOHN BRADDOCK ) அவர்களால் சங்ககிரி மாவலிப்பாளையத்தில் உருவாக்கப்பட்ட இரயில்வே பணிமனை (WORKSHOP) யில்- பணி செய்து உழைத்தவர்கள் சேலம் தொழிற் கல்வி பயிலகத்தில் படித்து முடித்த மாணவர்களே! இந்த பணிமனை பணிகளின் தாக்கத்தின் பரிணாம வளர்ச்சியே இன்றைய சங்ககிரி பணிமனை.

### தொழில்களின் வளர்ச்சி!

சேலம் நகரில் தினம் தினம் இடிக்கப்படும் பழங்கால கட்டிடங்களின் இடிபாடுகளில் கிடைக்கும் பழங்கால செங்கல்கள், BASEL MISSION ஓடுகள் சேலம் தொழிற் பயிற்சி பயிலகத்தின் பணிகளின் சாட்சிகள், நாம் பேசாமலிருந்தாலும் இந்த செங்கற்களும், ஒடுகளும் பேசுவதை நாம் கேட்காமலிருக்க முடியுமா?

**"அவர்களுக்கு அவர் (இயேசு) பிரதியுத்தரமாக; இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்"**

**லூக்கா 19:40**

# பாளையங்கோட்டையில் இராணுவ படை பிரிவுகள்



இ.மாரியப்பன்
திருநெல்வேலி

பழமை வாய்ந்த ஒருங்கிணைந்த திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்கள் அடங்கிய திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஏராளமான வரலாற்றுச் சிறப்புகள், பாரம்பரிய சிறப்புகள் உண்டு என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். அதே சிறப்பு சிறப்பு பாளையங்கோட்டை நகரத்திற்கும் உண்டு. பாளையங்கோட்டை ஸ்ரீவல்லபபாண்டியன் காலத்தில் ஸ்ரீவல்லபமங்கலம் என்றும், சோழர் காலத்தில் உத்தம சோழ சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டது. பிறகு பாளையக்காரர் பாளையக்காரர்கள் ஆட்சி காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலும் பாளையங்கோட்டை சிறப்புற்று விளங்கியது. பாளையங்கோட்டை என்ற ஊரின் பெயரில் கோட்டை என்ற சொல்தான் இருப்பதற்கு இந்த பகுதியில் கோட்டை அமைந்திருந்ததே காரணமாகும். தொடக்ககாலத்தில் வீரபாண்டியன் கட்டபொம்மன் வசமிருந்த கோட்டை பின்னர் ஆங்கிலேயர் வசம் மாறியது. இதற்குப் பின்தான் பாளையங்கோட்டையில் ராணுவ படைப்பிரிவு தளம் உருவாக்கப்பட்டது. குறிப்பாக பாளையங்கோட்டை சமாதானபுரம் மிலிட்டரி லைன் தொடங்கி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் தொடங்கி பாளையங்கோட்டை தெற்கு கடைவீதி அடுத்த அரசு சித்த மருத்துவக் கல்லூரி வளாகம் வரையிலும் பெரியகோட்டை இருந்தது. தற்பொழுது அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ள இடம்தான் வெடிபொருள் வைத்திருக்கும் இடமாகும். நீண்ட நெடிய அழகான அழகான ஒரு கோட்டையாக இருந்த இடம்தான் இன்று அரசு அருங்காட்சியகம், கோட்டைவாசல் பிள்ளையார் கோவில், வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அமைந்துள்ள இடம் என சிறு சிறு சான்றுகளாக நம் கண்முன் காட்சி அளிக்கிறது. எந்த இடம் தற்போது அரசு சித்த மருத்துவ கல்லூரியின் முன்வாசல் தான் கோட்டையில் ஒரு பகுதியில் ஓரமாக நீச்சல் குளமாக இருந்தது. அதே போல் கோட்டைமேல வாசல் பிள்ளையார் கோவில் தான்போருக்குச் செல்லும் முன் அரசர்கள், வீரர்கள், போருக்குச் செல்லும்முன், இறை வழிபாடு செய்யும் இடமாகும் அதேபோல் தற்போது உள்ள பாளையங்கோட்டை ஆயுள் காப்பீட்டு கழக கட்டிடம், பாளையம் கோட்டை காவல் நிலையம், குருடர் பள்ளி, குளோரிந்தா ஆலயம் தூய யோவான் கல்லூரி ஆகிய பகுதிகள் ராணுவ படைப்பிரிவுகள் இருந்த இடங்களாகும். தற்பொழுது இது நீண்ட நெடிய தெற்கு கடைவீதி என்ற தெருவாக மாறியுள்ளது. பாளையங்கோட்டை பார்வையற்றோர்பள்ளி, பாளையங்கோட்டை காவல் நிலையம் ஆகிய இடங்களில் கல்வெட்டுக்கள் இன்றளவும் நாம் பார்க்கும் வகையில் அமைந்துள்ளன. இதேபோல் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் படைப்பிரிவுகள் இறைவழிபாடு செய்வதற்காகத்தான் இங்கிலீஷ் சர்ச், மிலிட்டரி லைன் தேவாலயம் ஆகியவை உருவாக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்திலேயே ஆங்கிலத்தில் இறைவழிபாடு நடந்த இடம் தான் இங்கிலீஷ் சர்ச் ஆகும். அதே தேவாலயத்தில் தான் திருநெல்வேலி மாவட்ட கலெக்டராக இருந்த ஆஷ் துரை அவர்களின் கல்லறை உள்ளது. இவர் 1811 ஆம் ஆண்டு மணியாச்சி ரயில் நிலையத்தில் வைத்து வாஞ்சிநாதன் என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டது வரலாறு, ஆங்கிலேய துரைமார்களின் இளவயது மனைவி அரசு உயர்



அதிகாரிகள், அவர்கள் தம் குழந்தைகள், ஆகியோர் மரித்ததை குறிக்கும் வகையில் கவிதை நயத்துடன் பல்வேறு கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இதில் குளோரிந்தா ஆலயத்திலுள்ள படைப்பிரிவு கல்வெட்டு மாவட்ட தொல்பொருள் அலுவலகத்தில் வைத்து பராமரிக்கப்படுகிறது. திருநெல்வேலி வரலாற்று விழிப்புணர்வு மையம் சார்பில் 1993-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் போது இந்த கல்வெட்டு தொல்பொருள் ஆய்வுத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் படைப்பிரிவு 1853ம் ஆண்டு இருந்து செயல்பட்டு இருந்துள்ளது. இதில் **MILITARY CANNONT-MENT** என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இதேபோல் 1880 ஆம் ஆண்டு அரச



சித்த மருத்துக் கல்லூரியில் தற்போது உள்ள தெரு திருமூலர் மாளிகையை கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டும் போது குளியலறை இருந்ததற்கான படிக்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன, அந்த படிக்கட்டுகளை இன்றும் சித்தமருத்துவ கல்லூரியில் வைத்து சித்த மருத்துவர்கள் வைத்து பராமரித்து வருகின்றனர். பாளையங்கோட்டை கோட்டை மேலவாசல் பிள்ளையார் கோவில் மேல் பகுதியில் உள்ள முன்பிருந்த மேடை காவல் நிலையம் தான் கோட்டையின் பிரதான பகுதி ஆகும். அதன் படி கட்டி படிக்கட்டுக்கு இரண்டு பக்கவாட்டிலும் குதிரை லாயங்கள் இருப்பதை இன்றும் காணலாம். பாளையங்கோட்டையில் படைப்பிரிவு இருந்த நிலைமை மாறி தற்போது உள்ள ஆயுதப்படை மைதானம் மிலிட்டரி லைன் மிக அருகில் உள்ளது என்பதுகுறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய எரிகோ !



● திரு. T. ஜான் செல்வின்
கோவை

வேதத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த சம்பவத்தில் ஒரு முரண்பாடு உள்ளது. கவனியுங்கள். அது..

எரிகோவிற்கு அருகிலுள்ள குருடர்களைக் குணப்படுத்திய நிகழ்வு (மத்தேயு 20: 29-34, மாற்கு 10: 46-52, மற்றும் லூக்கா 18: 35-43 ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது)

பல ஆண்டுகளாக வேதத்தில் இதை சந்தேகிப்பவர்களால் மட்டும் மிகவும் விமர்சிக்கப்பட்டு வருகிறது. அதாவது, மாற்கு மற்றும் லூக்கா புத்தகத்தில் இருவரும் ஒரே ஒரு குருடனை மட்டும் இயேசு குணப்படுத்துவதாக குறிப்பிடுகையில், (இறுதி பஸ்கா பண்டிகைக்கு கிறிஸ்து எருசலேமுக்குச் சென்றபோது) மத்தேயு இயேசுவினால் இரண்டு பேர் குணமடைந்து அற்புதம் பெற்றதாக பைபிளில் பதிவு செய்கிறார்.

கவனியுங்கள் ! மேலும், மத்தேயுவும் மாற்க்கும் இயேசு எரிகோவை விட்டு வெளியேறும்போது குருடர்கள் குணமடைந்ததைக் குறிப்பிடுகிறார்கள், அதேசமயம் கர்த்தர் நகரத்திற்கு அருகில் வந்தபோது ஒரேயொரு

குருடர் மட்டும் குணமடைந்துவிட்டார் என்று லூக்கா கூறுகிறார் . எரிகோ நகரில் இயேசுவின் அற்புதத்தைச் சுற்றியுள்ள இந்த வேதவாக்கிய வேறுபாடுகள், பிறமதத்தார் முன்னிலையில் விவாதத்திற்கு எழுகிறது. சமீபத்தில் பிறமார்க்கத்தார் ஒருவர் இப்படி கேட்டார் ! அதாவது, ஆவியானவர் மூலம் எழுதப்பட்ட பைபிளில், அதை எழுதிய எழுத்தாளர்களின் பொய்யை உங்களுக்கு முன் சுட்டிக்காட்டி நிரூபிக்கவா? என்று.. இப்படியான கேள்விகள் எழுவது நமக்கு துக்கத்தை உண்டுபண்ணுகிறது என்பது உண்மை.. ஏனெனில், இன்றெல்லாம் வேத ஆராய்ச்சி, ஒரு வேத சம்பவம் வாசித்தால் அதைப்பற்றிய பின்னணி வரலாறு ஆராய்ந்து அறிந்துகொள்ளுதல், போன்ற காரியங்களில் அநேகர் ஈடுபடுவதில்லை. சொல்லுகிறதை கேட்டு ஆமென் சொல்லுகிற வழக்கத்தில் புரண்டுவருகிறது இன்றைய கிறிஸ்தவம் ! சரி, மேற்சொன்ன பகுதியில் உள்ள முரண்பாட்டை அது முரண்பாடா என்று நாம் கீழே ஆராய்வோம் !



முதலாவதாக, இரண்டு நற்செய்தி நூல் விவரங்களிலும் ஒரு குருடனை மட்டுமே குறிப்பிடுகின்றன, மற்றொன்றில் இருவரைக் (குருடர்களை) குறிப்பிடுகின்றன என்பது பற்றி நாம் இனி கவலைப்படத் தேவையில்லை. மாற்கு மற்றும் லூக்கா ஒரே ஒரு குருடனைப் பற்றி மட்டுமே அவர்களுடைய நூலில் பேசுவதால், அவர்கள் மத்தேயு நூலில் சொன்ன இரண்டு குருடர்கள் பற்றிய வார்த்தைகள் இருந்ததை மறுத்துவிட்டார்கள் என்று அர்த்தமல்ல.

சொல்லுகிறதை கேட்டு ஆமென் சொல்லுகிற வழக்கத்தில் புரண்டுவருகிறது இன்றைய கிறிஸ்தவம்

மத்தேயு மட்டுமே இயேசுவின் தொடுதலால் அற்புதம் பெற்றதாக பதிவு செய்தார் (மத் 20:34), ஆனால் மார்க் (10:52) மற்றும் லூக்கா (18:42) போன்றவர்கள் இயேசு பேசிய வார்த்தைகளை அவர் நமக்கு தரவில்லை. எனவே, இதில் சம்பந்தப்பட்ட அற்புதம் பெற்றவர்களின் எண்ணிக்கை தொடர்பாக எந்த மோதலும் வேதத்தில் இல்லை. கணக்குகள் ஒருவருக்கொருவர் கூடுதலாக 1, 2- என உள்ளன.

மேலும், பார்வையற்றவர்களில் ஒருவரான பர்திமேயுவின் தந்தை (திமேயு, 10:46) பெயரை மாற்கு குறிப்பிட்டிருப்பது ஏனென்றால், மாற்குவிற்கு நன்கு தெரிந்த ஒரு குருடனை அங்கு மையபடுத்தியுள்ளதை அறியலாம்.

இப்போது, நீங்கள் இயேசுவின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மனிதராக உங்களை நினைத்துக்கொள்ளுங்கள், அப்போது, ஏராளமான மக்களை இயேசு குணப்படுத்துவதைக் கண்டிருந்தால் (குணமான அவர்களில் ஒருவர் உங்களுக்குத் தெரிந்த ஒருவர் என வைத்துக்கொள்ளுங்கள்), நீங்கள் வீடு திரும்பி உங்கள் குடும்பத்தினருடன் பேசும்போது, இயேசுவின் அற்புதத்தில் முதலில் உங்கள் நண்பரைப் பற்றி மட்டுமே பேசலாம் என்பது என்னுடைய புரிதல். எந்த வகையிலும் இது சொல்லுகிற உங்களுக்கு வஞ்சகமாக இருக்காது.

இப்போது இரண்டாவது நிகழ்வுக்கு வருவோம் !? இயேசு எரிகோவை விட்டு வெளியேறும்போது குருடர்கள் குணமாகிவிட்டதாக மத்தேயுவும் மாற்க்கும் குறிப்பிடுவதற்கு ஏதேனும் தர்க்கரீதியான காரணம் இருக்கிறதா , அதே நேரத்தில் கர்த்தர் நகரத்திற்கு அருகில் வந்தபோது ஒரு குருடர் குணமடைந்துவிட்டார் என்று லூக்கா குறிப்பிடுகிறார். உண்மையில், கணக்குகள் ஏன் வித்தியாசமாக சொல்லப்படுகின்றன என்பதற்கு குறைந்தது இரண்டு யதார்த்தமான சாத்தியங்கள் உள்ளன.

முதலாவதாக, இந்த சந்தர்ப்பத்தில் எரிகோவின் அருகே மூன்று குருடர்கள் குணமாகியிருக்கலாம்.

1) இயேசு நகரத்தை நெருங்கியபோது நிகழ்ந்ததாக லூக்கா குறிப்பிட்ட ஒரு குணமாக்கும் நிகழ்வு.

2) மத்தேயு மற்றும் மாற்கு பதிவு செய்தது வேறு ஒரு குணமாக்கும் நிகழ்வை குறிக்கும்.

கீழே அதன் விளக்கத்தை பார்ப்போம் !

இயேசு நகரத்திற்குள் நுழைந்தபோது (18:36) குறிப்பிட்ட தெரு ஜனங்கள் இருந்ததை "லூக்கா" மட்டுமே குறிப்பிடுகிறார், ஆனால் மத்தேயு (20:29) மற்றும் மாற்கு (10:46) இருவரும் ஒரு "திரளான மக்கள் பெரும் கூட்டம்" இருந்ததை குறிப்பிட்டுக் கூறுகிறார். இயேசு நகரத்தை விட்டு வெளியேறிய நேரத்தில் அங்கிருந்து அற்புதத்தை நேரில் கண்ட மக்கள், நகரத்திற்குள் செல்லும் வழியில் ஆர்ப்பரித்து ஆரவாரத்துடன் இயேசுவின் அற்புதமான

குணப்படுத்துதல் பற்றிய செய்தியை விரைவாக பரப்பி இருப்பார்கள். இது திரளான கூட்டத்திற்கு காரணமாக இருக்கும்.

அடுத்து, இந்த நிகழ்வுகளை ஒத்திசைக்க மற்றொரு சாத்தியமான வழி என்னவென்றால், கிறிஸ்துவின் காலத்தில் உண்மையில் இரண்டு எரிகோ பட்டணங்கள் இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்வது.



முதலாவதாக, பழைய ஏற்பாட்டு வரலாற்றின் எரிகோ இருந்தது (யோசுவா 6:1, 1 இராஜா 16:34). இருப்பினும், முதல் நூற்றாண்டில், அந்த நகரம் பெரும்பாலும் இடிந்து கிடந்த ஒரு சிறிய கிராமமாக இருந்தது, அந்த இடத்திற்கு தெற்கே சுமார் இரண்டு மைல் தொலைவில் பெரிய ஏரோது கட்டிய புதிய எரிகோ இருந்தது. ஆகையால், கர்த்தர் எருசலேமை நோக்கிப் பயணிக்கிறார்,.

முதலில் பழைய ஏற்பாட்டு எரிகோ வழியாகச் சென்று, பின்னர், தென்மேற்கே இரண்டு மைல் தொலைவில், ஏரோதிய எரிகோ வழியாகச் செல்வார். (பாதை அப்படித்தான் உள்ளது) அதன்படி, எரிகோவை விட்டு வெளியேறிய மத்தேயு மற்றும் மார்க் பற்றிய குறிப்புகள் பழைய எரிகோவைக் குறிக்கும்,

அதேசமயம் இயேசு எரிகோவிற்கு அருகில் வருவதை லூக்கா கவனித்திருப்பது புதிய நகரத்தைக் குறிக்கும்.

எனவே, பரிசீலிக்கப்பட்ட அற்புதங்கள் இரண்டு எரிகோவுக்கு இடையில் நிகழ்த்தப்பட்டு உள்ளது.

சரித்திரத்தை மாற்ற யாராலும் முடியாது. அதேபோல் தேவனுடைய அற்புத நிகழ்வுகளின் சாட்சிகள் அபாரமானவை. அதில் குறையுள்ள மனதோடு வாசிக்கிறவருக்கு அவிசுவாசமே மிஞ்சும். மீண்டும் அடுத்த வேறொரு வேத ஆராய்ச்சி கட்டுரையில் உங்களை சந்திக்கிறேன்.


BHIM UPI
Tirunelveli Christian Historical Society

**கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்** மாத இதழுக்காக சந்தா விபரம்

- மாத சந்தா ரூ 60/- + நன்கொடை
- ஆண்டு சந்தா ரூ 600/- + நன்கொடை
- ஐந்து ஆண்டுக்கான சந்தா ரூ 3000/- + நன்கொடை

பணம் செலுத்திய பின்பு செலுத்திய விபரத்தையும் உங்களுடைய முகவரியையும் மறக்காமல் கிழே கொடுக்கப்படுள்ள தொலைபேசி அல்லது மின்னஞ்சல் முகவரி மறக்காமல் தெரிவிக்க அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

+91 9176780001
+91 7538812218
**christianhistorical@gmail.com**





J. ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி

# திருநெல்வேலி மாவட்டம் பிரமதேசத்தில் கிறிஸ்தவம்

## ஊர் சிறப்பு

1861 வரை வட்டார தலைநகரமாக Taluk Centre ஆக இருந்த ஒரு பாரம்பரியமிக்க பழமை வாய்ந்த கிராமமே பிரமதேசம். 1801 இல் அக்காலத்து ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் (தற்போதைய திருநெல்வேலி தூத்துக்குடி விருதுநகர் தென்காசி மாவட்டங்கள்) நவாப் ஆட்சியில் இருந்து ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட போது திருநெல்வேலி மாவட்ட தாலுகாக்கள் பட்டியலில் பிரமதேசம் தாலுகா இடம்பெற்றுள்ளது. தாலுகா தலைமையிடமாக 1861 வரை பிரமதேசம் இருந்த நிலையில் 1861இல் அம்பாசமுத்திரம் தாலுகா தலைமையிடமாக மாற்றப்பட்டது. ஆதலால் சாதாரண கிராமமாக பிரம தேசம் மாறியது. பிரமதேசத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் பழமை வாய்ந்த கல்வெட்டுக்களை கொண்ட கோயிலாகும் நீண்ட பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இக்கோயிலில் உள்ள தெப்பக்குளம் மற்றும் அதன் சிற்ப கலைத்திறன் மிகவும் சிறப்புக்குரியதாகும்.கருணை ஆறு எனப்படும் கடனாநதி பாசன கால்வாய் இவ்வூர் வழியே செல்வதால் அதன்மூலம் நேரடியாகவும், குளங்கள் மூலமாகவும் இவ்வூர் விவசாய நிலங்கள் பயனடைகின்றன.இவ்வூரின் வட எல்லை ஆக கடனா நதி உள்ளது.

## ஊர் பெயர் விளக்கம்

பிராமணர்களுக்கு அரசர்களால் வரிவிலக்குடன் மானியமாக வழங்கப்பட்ட நிலங்களைக் கொண்ட கிராமங்கள் பிரம்மதேயம் அல்லது பிரம்மதேசம் என்றும் சதுர்வேதி மங்கலம் என்றும் அக்காலத்தில் அழைக்கப்பட்டன. பிரமதேசம் கிராமம் பிராமணர்களுக்கு வரி விலக்குடன் கூடிய மானியமாக வழங்கப்பட்ட ஒரு கிராமம் ஆகும். பிராமணர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட ஒரு கிராமமாக இருந்தபோதிலும் பல சமூகத்தவரும் வாழ்ந்துவந்த ஒரு பெரும் கிராமமாக பிரமதேசம் இருந்தது. பிரம தேசத்தில் கிறிஸ்து மார்க்கம் பரவிய சுருக்கமான வரலாற்றை காண்போம்.

## நெல்லை அப்போஸ்தலர் அருள்திரு.ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணி

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் ரேனியஸ் ஐயரவர்கள் நற்செய்தி பணியாற்றியபோது பிரமதேசத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்லிடைக்குறிச்சியில் 1828 லும் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள அம்பாசமுத்திரத்தில் 1832 லும் சபைகள் நிறுவப்பட்டன. அதே காலகட்டத்தில் / பிரமதேசத்தில் ரேனியஸ் ஐயரவர்களால் நற்செய்தி அறிவிக்கப்பட்ட போதும் பிரமதேசம் கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்கு திருநெல்வேலியில் கிறிஸ்தவ சபைகள் நிறுவப்பட்ட இடங்களிலும் முக்கியமான இடங்களாக தெரிந்து கொள்ளப்பட்டவற்றில் சபை இல்லாத இடங்களிலும் ரேனியஸ் ஐயர் அவர்களால் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டிருந்தது அவ்வாறு பள்ளிக்கூடம் நிறுவப்பட்ட இடங்களில் பிரமதேசமும் ஒன்று. 1833 இல் சிறப்பாக நடந்த பள்ளிக்கூடங்கள் என்ற பட்டியலிலும்ம பிரம்மதேசம் பள்ளி இடம்பெற்றுள்ளது ஆதலால் பள்ளிக்கூடம் 1830க்கும் 1833க்கும் இடைப்பட்ட காலத்தில் ரேனியஸ் ஐயர் அவர்களால் நிறுவப்பட்டிருக்க வேண்டும் என அறிய முடிகிறது. இந்தப் பள்ளிக்கூடம் பிரமதேசம் ஊரில் மத்தியில் அமைக்கப்பட்டதாக (தற்போதைய இடம் அல்ல) செவிவழி செய்தியின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. பிரம்மதேசம் பள்ளிக்கூடத்திற்கு இந்து ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்ததாகவும் அவர் மூலமாக பள்ளி பாடங்கள் உடன் கிறிஸ்தவ வேதபாடம் பள்ளி குழந்தைகளுக்கு கற்பிக்கப்பட்டதாகவும் அவ்வாறு கற்பிக்கப்பட்ட வேதத்தை நன்கு கற்ற ஒரு சிறுவன் கிறிஸ்தவராக மாறியதாகவும் அந்த சிறுவன் வியாதி பட்டபோது அவரது வியாதிக்காக தனது பெற்றோர் விக்கிரகங்களுக்கு பலியிட முயன்றபோது அதை அவன் தடுத்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் ஜெபிப்போம் என்று சொல்லி ஜெபித்து அந்த சிறுவன் சுகம் பெற்றதாக சபை வரலாற்று செய்திகள் மூலம்

அறிய முடிகிறது அந்த சிறுவனுடைய விசுவாசம் மூலமாக அநேகர் கிறிஸ்தவ விசுவாசத்தை உள்ளத்தில் ஏற்றதாக அறிய முடிகிறது ஆனால் அந்நேரம் சபை அங்கு உருவாகவில்லை.

## பிரமதேசம் மற்றும் கல்லிடைக்குறிச்சி கிராமத்தார் இடையேயான தொடர்புகள்

பிரமதேசமும் வாகைகுளமும் இரட்டை கிராமங்கள் ஆக காணப்பட்டன இந்த இரு கிராமங்களையும் கடனாநதி பாசன கால்வாய் பிரித்தது கடனாநதி பாசன கால்வாயின் தென்புறம் வாகை குளத்தில் நாடார் சமூகத்தினர் மிகுதியாக வாழும் தெருவும் அதேபோன்று கடனாநதி பாசன கால்வாயின் வடபுறம் பிரமதேசத்தில் நாடார் சமூகத்தினர் அதிகமாக வாழும் தெருவும் இருந்து வந்தது. இவ்விரு கிராமங்களுக்கும் கல்லிடைக்குறிச்சி மேல்முகம் நாடார் தெரு விற்கும் திருமண உறவுகள் அதிகம் காணப்பட்டது. 1850 இல் கல்லிடைக்குறிச்சி மேல்முகம் நாடார் தெருவில் அருள்திரு.ரேனியஸ் ஐயர் அவர்களின் மகன் அருள்திரு சார்லஸ் ரேனியஸ் ஐயர் அவர்களின் நற்செய்திப் பணியால் மா. இசக்கிமுத்து - வடிவு தம்பதியரின் மகன் அய்யம்பெருமாள் சுவிசேஷமுத்து என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவராகி இருந்தார். 1878 இல் அம்பாசமுத்திரம் சேகரத்திற்கு என தனி குருவானவர் Rev.தேவப்பிரசாதம் ஐயரவர்கள் நியமிக்கப்பட்ட படியினால் டோனாவூர் வட்டாரத்திலிருந்து கல்லிடைக்குறிச்சி சபை நல்லூர் வட்டாரத்தில்புதிய சேகரமாகிய அம்பாசமுத்திரம் சேகரத்தொடு சேர்க்கப்பட்டது. கல்லிடைக்குறிச்சியில் உள்ள தங்களுடைய உறவினர்கள் கிறிஸ்தவராக இருந்ததால் பிரமதேசம் நாடார் தெருவில் உள்ளவர்களுக்கும் கிறிஸ்தவ நற்செய்தி சென்றது.

## பிரமதேசம் நாடார் மேலத்தெருவில் ஏற்பட்ட ஊர் பிரச்சினையும் மேலத்தெருவில் கிறிஸ்தவமும்

பிரமதேசம் நாடார் தெருவில் மேலத்தெரு மற்றும் கீழத்தெரு (ஆத்தியடி வளைவு) என இரு ஊர் அமைப்புகள் இருந்தன இதில் நாடார் மேலத்தெரு ஊர் அமைப்பில் முக்கியத்துவம் பெற்றவராகவும் கூப் என சொல்லப்பட்ட மலைக்காடுகளின் மரங்களை குத்தகைக்கு எடுத்து வெட்டி விற்பனை செய்யும் காண்ட்ராக்ட் பணியை செய்து வந்தவரும் ஆன நாராயண நாடார் என்பவர் பிரமதேசம் நாடார் மேலத்தெருவில் கடனாநதி பாசன கால்வாயில் வடபுறம் இருந்த வீட்டில் வசித்து வந்தார். அவர் மேலத்தெருவில் 60 வீட்டு சொக்காரர்(பங்காளிகள்) குடும்பத்தில் முக்கியத்துவம் பெற்றவராக இருந்தார் இக் குடும்பத்தினர் பெரியதாழை அருகிலுள்ள மணல்திண்டு சாஸ்தா - புறப்புடையார் சாஸ்தாவை குல தெய்வமாக வழிபட்டு வந்தனர் நாராயணன் மேலத்தெரு ஊர் அமைப்பில் பொறுப்பாளராகவும் இருந்தார். கிறிஸ்தவம் குறித்து நன்கு அறிந்தவராகவும் இருந்தார். அந்நேரம் மேலத்தெரு ஊர் கூட்டத்தில் ஓர் பிரச்சினை ஏற்பட்டதாகவும் அதில் மனவேதனை அடைந்த அவர் இந்த ஊரில் கிறிஸ்தவ வேதத்தை கொண்டுவந்து காட்டுவேன் என்று உறுதி எடுத்ததாகவும் அதன்படி நாராயணன் என்ற அவர் நல்லதம்பி என்ற பெயரில் திருமுழுக்கு பெற்று குடும்பமாக கிறிஸ்தவர் ஆனார் நாராயணன் நல்லதம்பியாக மாறிய ஆண்டு 1878 க்கும் 1884 க்கும் இடைப்பட்ட ஆண்டு என்பதையும் அவர் அம்பாசமுத்திரம் சேகர குருவானவர் மூலமாக ஞானஸ்நானம் பெற்றுள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

> “வியாதிக்காக தனது பெற்றோர் விக்கிரகங்களுக்கு பலியிட முயன்றபோது அதை அவன் தடுத்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் ஜெபிப்போம் என்று சொல்லி ஜெபித்து அந்த சிறுவன் சுகம் பெற்றான்.”

## திருமண உறவுகள்

நாராயணன் என்ற நல்லதம்பி அவர்களின் மூத்த மகன் தொப்பநாடார் என்றழைக்கப்பட்ட பரமானந்தம் கல்லிடைக்குறிச்சி மேல்முகம் நாடார் தெருவைச் சார்ந்த கொப்புளநாடார் என்றழைக்கப்பட்ட திரு. நாராயணன் என்ற நற்குணத்தான் அவர்களின் மகள் அன்னவடிவை 12.11.1884 அன்று கல்லிடைக்குறிச்சி C.M.S தேவாலயத்தில் வைத்து திருமணம் செய்தார். இதே குடும்பத்தினர் தங்களுக்குள் மற்றொரு சம்பந்தமும் செய்து கொண்டனர் பிரமதேசம் நாராயணன் என்ற நல்ல தம்பியின் ஒன்றுவிட்ட சகோதரர் அருணாச்சலத்தின் மகள் சந்திரவடிவை கல்லிடைக்குறிச்சி மேல்முகம் நாடார் தெருவைச் சேர்ந்த கொப்புளநாடார் என்றழைக்கப்பட்ட நாராயணன் என்ற நற்குணத்தான் அவர்களின் மகன் ஏசுவடியான் 05.08.1892 அன்று திருமணம் செய்து கொண்டார். திரு.அருணாச்சலம் அவர்களின் நேரடி வழிமரபினர் செல்லையா நாடார் குடும்பத்தினர் (திரு செ.காலேப், திரு.செ. ஐசக் கருணாகரன் ) பிற்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

## மேலத் தெருவில் வேகமான வளர்ச்சி

நாடார்மேலத்தெரு 60 வீட்டு சொக்காரர் (பங்காளிகள்) குடும்பத்தைச் சார்ந்த பழனி பாக்கியநாதன் என்ற பெயரிலும் கருத்தக்கண் ஞானக்கண் என்ற பெயரிலும் மூக்கன் சாமுவேல் வேதநாயகம் என்ற பெயரிலும் திருமுழுக்குப் பெற்றார்கள்

## பிரமதேசம் நாடார் கீழத்தெரு எனப்படும் ஆத்தியடி வளைவில் கிறிஸ்தவம்

ஆத்தியடி வளைவைச் சார்ந்த நாடார்கள்

கருணையாறு என அழைக்கப்படும் கடனாநதியின் கரையோரத்தில் இருந்த அடைக்கலம் சாஸ்தாவை குல தெய்வமாக வழிபட்டு வந்தார்கள்.அந்த ஆத்தியடிவளைவு குடும்பத்தைச் சார்ந்த பாவநாசம் என்பவருக்கும் நாடார் மேலத்தெருவில் முதன்முதலாக கிறிஸ்தவராக மாறின நாராயணன் என்ற நல்லதம்பி யின் மகளுக்கும் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது இந்த திருமணத்தின் போது பாவநாசம் இயேசுதாசன் என்ற பெயரில் ஞானஸ்தானம் பெற்றார் இவரே ஆத்தியடி வளைவின் முதல் கிறிஸ்தவர். இவரை தொடர்ந்து இதே குடும்பத்தில் கிருஷ்ணன் என்பவர் கீழச் சிவந்திபுரத்தை சார்ந்த கிறிஸ்தவ குடும்பத்தில் சொர்ணம் என்பவரை திருமணம் செய்கிற சூழ்நிலையில் ஞானப்பிரகாசம் என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவர் ஆனார் அதைத் தொடர்ந்து இதே குடும்பத்தில் சுடலை முத்து - வடிவு தம்பதியரின் ஆண்பிள்ளைகள் செல்வராஜ் என்ற பெயரிலும் ராஜநாயகம் என்ற பெயரிலும் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்கள் ஆனார்கள் ராஜநாயகம் அவர்களின் மகனே திருநெல்வேலியில் சிறந்த மருத்துவராகப் பணி செய்யும் டாக்டர் அன்பு ராஜன் அவர்கள் ஆவார். இவர்களைத் தொடர்ந்து ஆத்தியடி வளைவில் ஆறுமுகநயினார் என்பவர் மேலத்தெரு திரு. பரஞ்சோதி அவர்களின் மகளை திருமணம் செய்கையில் ஆரோக்கியம் என்ற பெயரில் ஞானஸ்தானம் பெற்று கிறிஸ்தவரானார். அவர் பழனி என்ற பாக்கியநாதன் அவர்களின் பேத்தியும் பரஞ்சோதி அவர்களின் மகளுமான மல்கியம்மாளைத் திருமணம் செய்தார்.

## ஹார்வி மில் எனப்படும் மதுரா கோட்ஸ் பணியாளர்கள் மத்தியில் காணப்பட்ட மனமாற்றம்

விக்கிரமசிங்கப்புரத்தில் உள்ள ஹார்வி மில் எனப்படும் மதுரா கோட்ஸ் நூற்பாலையில் பிரமதேசத்தைச் சார்ந்த 4 வாலிப நண்பர்கள் ஒன்றாக பள்ளிக்கு செல்லும் பொழுது நமது ஊரில் கிறிஸ்தவ வேதம் வந்துவிட்டது நாமும் கிறிஸ்தவத்தில் சேரலாம் என வேலைக்கு போகும்போதும் வரும்போதும் பேசிக்கொண்டார்கள் திரு.காளிமுத்து, திரு.திரவியம், திரு.கோயில்பிள்ளை, திரு.நயினார், ஆகிய அந்த நான்கு பேரும் பிரமதேசம் சபை ஊழியர் மற்றும் அம்பாசமுத்திரம் சேகர குருவானவர் ஆகியோரிடம் தங்கள் விருப்பத்தை சொல்லி காலேப், திரவியம், கோயில்பிள்ளை, நவமணி, என்ற பெயர்களில் திருமுழுக்கு பெற்றுக்கொண்டார்கள். இதில் திரு. காலேப் அவர்கள் திரு அருணாசலம் அவர்களின் நேரடி வழி மரபைச் சார்ந்த திரு செல்லையா நாடார் அவர்களின் மகன் ஆவார் அவர் பழனி என்ற பாக்கியநாதன் அவர்களின் பேத்தியும் பரஞ்சோதி அவர்களின் மகளுமான மரியாளைத் திருமணம் செய்தார். திரு திரவியம் பிரம தேசத்தின் முதல் கிறிஸ்தவரான நாராயணன் என்ற நல்லதம்பியின் நேரடி வழி மரபைச் சேர்ந்த மனுவேல் அவர்களின் மகளை திருமணம் செய்தார் திரு.கோயில் பிள்ளை கல்லிடைக்குறிச்சி சபையில் திருமணம் செய்தார்.

## புதிய குடும்பத்தினர்கள்

நான்கு குடும்பத்தைத் தொடர்ந்து திரு.தேனையா குடும்பத்தினர் திரு.ராஜமணி குடும்பத்தினர் ஆகியோர் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இவ்வாறு கிறிஸ்து மார்க்கம் பிரமதேசத்தில் படிப்படியாக பரவியது இன்று சுமார் நூறு குடும்பத்தினரைக் கொண்ட திருச்சபையாக பிரமதேசம் சபை உள்ளது. திருமண உறவுகள் கிறிஸ்தவராக மாறுவதற்கு காரணமாக இருந்துள்ளது என்பதற்கு பிரமதேசம் சபை ஓர் சான்றாக உள்ளது.


**கிறிஸ்டியன் வரலாற்று சங்கம் தொடர்ந்து சிறப்பாக செயல்படவும் இன்னும் பல வரலாற்று சம்பவங்களை ஆவணப்படமாக எடுக்கவும், புத்தகங்களை மின்னணு புத்தகங்களாக மாற்றவும், புத்தக ஸ்கேன் மிஷின், பழைய புத்தகங்கள் மறுபதிப்பு செய்யும் திட்டம், நல்ல கேமரா மற்றும் இதர உபகரணங்களும் வாங்கவும் உங்களுடைய ஜெபத்துடன் கூடிய உதவியை நாடுகின்றோம்.**

**Please find my account details below**

**Bank :- Federal Bank**
**Account name :- Tinnevelly Christian Historical Society**
**Account number :- 17480200003684**
**IFSC Code :- FDRL0001748**

நன்கொடைகளை அனுப்பிய பின்னர் கட்டாயம் எங்களுக்கு தெரிவிக்கவும் சங்கத்தின் வரவுகளையும் செலவுகளையும் நன்கொடையாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்க்கு வசதியாக இருக்கும்.

BHIM UPI



# அங்கியும் அதன் தோழமை வஸ்திரங்களும்

A .பத்மராஜன்

அங்கி என்பது ஆங்கிலத்தில் **Cassock** என்று அழைக்கப்படுகிறது.
பொதுவாக வெள்ளை நிற அங்கிகளை குருவானவர்கள் பயன்படுத்துவது உண்டு.
அங்கி தாழ்மையும் குணத்தையும், மக்களின் கவனத்தையும் ஒருங்கிணைக்கவும் அடையாளமாகவும் இருக்கவும்.

### ஆராதனையின் போது அணியும் வஸ்திரங்கள்

சர்பிலீஸ் ( **Surplice** )

குருவானவரும் , பாடகர் குழுவினரும் ஆராதனையின் போது அங்கியின் மேல் அணிந்துகொள்ளும் வஸ்திரம் குருவானவரது சர்பிலீஸ் பொதுவாக மெல்லிய வாயில் துணியில் தைக்கப்பட்டிருக்கும் , நீதி , பரிசுத்தம் இவற்றிற்கு இது ஒரு அடையாளம். அத்தியட்சர் அணியும் சர்பீலீஸ் இதேபோலதான் இருக்கும். ஆனால் இரண்டு புறங்களிலும் காவிநிற பட்டைகள் கொண்டிருக்கும் லுத்தரன் திருச்சபைகளில் பொதுவாக சாபிலிஸ் பயன்படுத்தாமல் ஆராதனைக்கென்றே பிரத்தியேகமான **Alb** என்ற கணுக்கால் வரை மறைக்கும் அங்கியை பயன்படுத்துகிறார்கள்.

கயிறு ( **Gridle** )

அங்கியின் இடுப்பைச் சுற்றி கட்டப்படும் கயிறு , தாழ்மையை வெளிக்காட்ட இந்த கயிறு அணிய பெறுகிறது . இது கறுப்பு நிறத்தில் இருக்கும் முழு அபிஷேகம் பெறாதவர்கள் வெள்ளை கயிறை பயன் படுத்துவார்கள் அத்தியட்சர் ஊதா ( **Violet** ) நிற கயிறை பயன்படுத்துகிறார்.

ஸ்டோல் ( **Stole** )

ஆராதனை நேரங்களில் கழுத்தைச் சுற்றி தோளின் மேல் அணியும் உடைதான் இது. கிட்டதட்ட அங்கவஸ்திரம் போல அல்லது துப்பட்டா போல காணப்படும் . குருவானவர் ஆண்டவருக்கு கீழ் படிந்தவர் என்பதனை இது காட்டுகிறது. யாராவது **குருவானவரை கௌரவிக்க சால்வை போர்த்தினால் , ஸ்டோலை எடுத்து கைகளில் வைத்துக்கொண்ட பின்பே சால்வை போர்த்த அனுமதிக்கப்படுவார்** , வெள்ளை ஊதா , பச்சை , சிவப்பு , மஞ்சள் , கருநீலம் போன்ற , கறுப்பு , சிவப்பு , வண்ணங்களில் இவை அமைந்திருக்கும். அட்வெந்து காலங்களில் ஊதாநிறமும் ( ராஜாக்களுக்கு உரிய நிறம் ) வெள்ளை நிறம் கிறிஸ்மஸ் ,



புத்தாண்டு , ஈஸ்டர் , ஞானஸ்நானம் , திடப்படுத்துதல் போன்ற சமயங்களில் பயன்படுத்தப்படுகிறது என்னும் **'Master Stole'** என்றே அழைக்கப்படுகிறது. திருமணம் நடத்தும்போது மங்களகரத்தை காட்ட மஞ்சள் நிறமும் , லெந்து காலங்களில் உபவாசத்தைக் குறிக்க கருநீலமும் , விஷேச நாட்கள் , அறுப்பின் பண்டிகை மற்றும் பரிசுத்த ஆவியின் திருநாட்களில் சிவப்பும் பயன்படுத்தப்படும். துக்க நாட்கள் , பெரிய வெள்ளி , அடக்க ஆராதனைகளில் கறுப்பு நிறம் பயன்படுத்தப்படும். திரித்துவ திருநாள் முதற்கொண்டு அட்வெந்து ' காலம் ஆரம்பிக்கும் வரை பொதுவாக வசந்த காலத்தை காட்டும் வண்ணமாக பச்சை நிறம் பயன்படுத்தப் படுகிறது. லுத்தரன் திருச்சபைகளில் பண்டிகை இல்லாத நாட்களில் பச்சை அணிவதாக கூறப்படுகிறது. குருவானவர் அணியும் ' ஸ்டோல் ' நிறத்தைப் பொறுத்து " ஆல்டரும் ' அதேவண்ணத்தில் அலங்காரம் செய்யப்படும் .



அத்தியட்சர் (**C . S . I**) அணியும் ஸ்டோலானது காவி வண்ணத்தில் காணப்படும்.

# சமரசம் செய்யாத சபை

● அருள்திரு. முனைவர். ச. இராஜசேகரன்

## முன்னுரை

சமரசம் செய்தலை எதிர்மறையாகவே நோக்கும் போக்கு யுதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமில் அதிகம் உண்டு. அதனால் சமரசம் செய்யவேண்டியதில் செய்யவேண்டும் என்பதை அறியாமல் இச்சமயங்கள் வளர்ச்சியடையாமல் போனதும் வரலாற்றில் உண்டு. இந்த மூன்று சமயங்களில் கிறிஸ்தவமும் இஸ்லாமும் மிஷனரிப்பணி செய்தே அதவாது மதப்பிரச்சாரம் செய்தே வளர்ந்தது. ஆனால் யுதம் இனப்பெருக்கத்தால் மட்டுமே வளர்ந்தது. அவர்களிலிருந்து வளர்ந்த இந்த இரு மதங்களும் அதைப்போலவே சமரசம் செய்துகொள்ளாமல், இவர்களுடைய சமயங்களுடன் சமரசம் செய்துகொள்ளவரும் மற்ற சமயத்தவரை இவர்கள் சமயங்களில் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனாலும் இந்தியா போன்ற ஆழமான கலாச்சார அடித்தளம் நிறைந்த நாடுகளில் கலாச்சார மற்றும் பிறசமய வழக்கங்களில் சமரசம் செய்துகொள்வதால் இச்சமயங்கள் இந்தியாவில் அதிகம் வளர்ந்துகொண்டிருக்கிறது.



ஆதித்திருச்சபை வரலாற்றில் கிறிஸ்தவம் யுதமதத்தின் விரிவாக்கமாகவே அறியப்பட்டது. காரணம் இயேசுவும் ஒரு யுதன் என்றும், அவருடைய சீடர்கள் அனைவரும் யுதர்கள் என்றும் அவர்களாலேயே அவர்களுக்குள் முதலில் கிறிஸ்துவும் கிறிஸ்தவமும் அறிவிக்கப்பட்டதால் ஆரம்ப காலத்தில் அநேக யுதர்கள் கிறிஸ்துவை நம்பி கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஆனால் காலப்போக்கில் புறஜாதியினாயின் மதமாற்றங்களால் திருச்சபையில் இருதரப்பினரும் ஒன்றாகும் சூழல் உருவானபோது பெரும் சர்ச்சை எழும்;பியது. அதன் காரணம் மற்றும் அதனால் விளைந்த விளைவுகள் பற்றி அப்போஸ்தல நடபடிகள் வரலாற்று ஆதாரங்களுடன் எடுத்துரைக்கிறது. ஆதியிலே யுதகிறிஸ்தவ சபை, புறஜாதி கிறிஸ்தவ சபை என இரண்டாக இல்லாமல் ஒன்றாக இருந்தது. அதனை நடைமுறையில் வலுவாக்கும் சூழல் உருவானபோது சமரசம் செய்வதில் பெரும் சோதனை வந்தது. அந்த சோதனையை யுதர்களாகிய அப்போஸ்தலர்களும் ஆதித்திருச்சபையும் எப்படி கையாண்டார்கள் என்பதையும் அதன் விளைவுகள் என்ன என்பதையும் அப்போஸ்தல நடபடிகள் மூலம் அறியலாம்.

## சாதிய சமரசம் செய்யாத சபை

அப்போஸ்தலர் 1:8ல் சபை சாட்சியாக இருக்கவேண்டிய ஸ்தலத்தை பட்டியலிடுகிறது: எருசலேமிலும், யுதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபாரியந்தம். இங்கு ஒரே சாதியிடம் சபை சென்று அந்த சாதியை வளர்க்க பாரிசுத்த ஆவியையும் அவருடைய பெலனையும் கொடுப்பதாக வாக்குக்கொடுக்கவில்லை. மாறாக அனைத்து சாதியினரிடமும் சென்று நற்செய்தி அறிவித்து சீடர்களாக்கி சபையாக உருவாக்கவே கட்டளையிட்டார் இயேசு (மத்.28:19). இந்த கட்டளையை நிறைவேற்றி சபையை ஸ்தாபிக்க சாதிய சமரசம் அவசியம் என்பதே இயேசு சொன்ன சத்தியம் அத்துடன் அதுவே பாரிசுத்தஆவி அருளப்பட்டதன் நோக்கம்.

இந்தியாவில் ராபர்ட் டி நோபிலி பகலில் பிராமணர்களுக்கு வீட்டில் இருந்தபடியேயும் இரவில் மற்ற சாதியினருக்கு அவர்கள் இருக்கும் இடத்தில் சென்று நற்செய்தி அறிவித்தது போல் இயேசு செய்யாமல் அவருடைய காலத்தில் பகலிலேயே யுதர்களுக்கும், வெளியரங்கமாகவே புறஜாதியினருக்கும் நற்செய்தி அறிவித்தார். நற்செய்தி அறிவிப்பதில் இயேசு சாதிய சமரசத்தை கையாண்டார். அதனால் ஏற்பட்ட எதிர்ப்புகளை சமாளித்தார். பாவிகளுடன் இருக்கிறார், அவர்களுடன் உணவருந்துகிறார். அவர்களுடன் தங்குகிறார் என்னும் பெரிய குற்றச்சாட்டிற்கு ஆளானாலும் அதை பொருட்படுத்தாமல் பாவவியாதியுள்ளவர்களுக்கு பாவஇரட்சகராக வந்திருக்கிறேன் என்று யுதர்களையும் புறஜாதிகளையும் பாவிகள் சாதி என்ற ஒரே பதத்தில் அழைத்து அவர்களை ஒன்றாக்கினார்.

அவரைத் தொடர்ந்து பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்பு பிலிப்பு சமாரியாவுக்கு சென்று அங்கு நற்செய்தி அறிவித்து சமாரியர்கள் மத்தியில் சபையை ஸ்தாபித்தான். பேதுரு கொர்நெலியு வீட்டிற்கு அனுப்பப்பட்டு பகிரங்கமாய் புறஜாதிகள் மத்தியில் திருச்சபை உருவாக காரணமாயிருந்தான். அவன் அங்கு சென்றதையும் அவர்களுக்கு நற்செய்தி அறிவித்து, அவர்களுடன் தங்கி உணவருந்தியதை எருசலேம் யுத கிறிஸ்தவர்கள் வெளியரங்கமாய் பாராட்டினாலும் உள்ளார ஏற்கமுடியாமல் திணறினார்கள். அதன் பின்பு

பவுல் அந்தியோகியாவில் புறஜாதிகள் மத்தியில் ஏற்பட்ட கிறிஸ்தவ எழுச்சியை கண்டு ஆச்சரியப்பட்டாலும் அவர்களை யுதர்கள் அவர்களுக்கு இணையாக ஏற்கமுடியாமல் சிரமப்பட்டதையும் அப்போஸ்தல நடபடிகள் 15ம் அதிகாரத்தில் காணலாம்.

அதுவரை உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என இரண்டாக இருந்த சாதி, கிறிஸ்தவர்களானவுடன் எப்படி ஒரே சாதியாகமுடியும் என்கிற கேள்வி யுதர்களிடையே ஏற்பட்டது. இதற்கு அவர்களுடைய 2000 வருட வரலாறும், பாரம்பரியமும், சட்டம் மற்றும் சமயமும் இடமளிக்கவில்லை என்று நினைக்கலாயினர். ஒரு யுதனாகிய பவுல், யுத கிறிஸ்தவ பவுலாக வளர்ந்து, பின்பு கிறிஸ்தவ பவுலாக மாறி, இறுதியில் புறஜாதி பவுலான போது கிறிஸ்துவுக்குள் யுதனென்றும் இல்லை, புறஜாதியான் என்றும் இல்லை என்கிறான் (கொலோ.3:11). இரண்டு பேரையும் இயேசு சிலுவையில் ஒன்றாக்கினார் (எபே.2:16) என்கிறான். மற்ற சாதியினரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர தானும் அந்த சாதிக்காரனாக மாறவும் தயார் (1கொலோ.9:20) என்று அறைகூவல் விடுகிறான். இதனால் புறஜாதிகள் மத்தியில் திருச்சபை வளர்ந்தது. இன்று உலகமெங்குமுள்ள சமயங்களில் பெருஞ்சமயமாக இருக்கும் கிறிஸ்தவம் பெருமளவில் ஐரோப்பியர்களிடையே இருக்கிறது. அதனால் கிறிஸ்தவம் ஐரோப்பிய மதம் என்றும், ஐரோப்பா கண்டமே கிறிஸ்தவத்தை உலகமெங்கும் பரவச்செய்தது என்றும் பெயர்பெற்றிருக்கிறது.

> சாதி சமரசம் ஏற்படும்வரை அவர்களுடைய இரட்சிப்பு ஒரு கேள்விக்குறியே!

ஆனால் யுதர்களிடைய உருவாகி வளர்ந்த திருச்சபை சாதிய சமரசத்தை ஏற்காததால், கி.பி. முதல் நூற்றாண்டிலேயே யுதர்களில் பெரும்பாலானோர் திரும்ப யுதமதத்திற்கே சென்றுவிட்டனர். சாதியா? சமயமா? என்னும் கேள்விக்கு, எங்களுக்கு சாதிதான் முக்கியம் என்று திரும்பிவிட்டனர். இன்று எருசலேமில் சில ஆயிரங்களிலேயே கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அதனால் இன்றும் இஸ்ரவேல் மக்கள் இரட்சிக்கப்பட உலகமே ஜெபித்துக்கொண்டிருக்கிறது. சாதி சமரசம் ஏற்படும்வரை அவர்களுடைய இரட்சிப்பு ஒரு கேள்விக்குறியே! அதனால்தான் யோவான், தனக்கு சொந்தமானதினாலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறான். சொந்தமானவர்கள் ஏற்காததால் புறஜாதிகளுக்கு கொடுக்கப்பட்டது என்று அதையே பவுல் வேறுவிதமாக சொல்கிறான்: முன்பாக தேவனற்று, இருளாக, காணியாட்சிக்கு புறம்பே இருந்த நீங்கள் இப்போது கிறிஸ்துவுக்குள் அவருடைய சொந்த ஜனங்களாக ஒளியில் வந்திருக்கிறீர்கள் என்கிறான்.

புறஜாதிகள் திருச்சபையான அந்தியோகியாவில்தான் முதன் முதலில் கிறிஸ்தவர்கள் என்று பெயர் பெற்றார்கள். ஒருவர் நிராகாரித்ததே மற்றவர்க்கு அத்தியாவசியமான ஒன்று என்பதைப் போன்று, கிறிஸ்தவத்தை சாதிய நிலையில் ஏற்காத யுதர்களால், புறஜாதிகள் கிறிஸ்தவ சமயத்தை தழுவினார்கள் என்பதே விவிலியமும் அதன் விளக்கமுமாகவும் இருக்கிறது. சாதிய சமரசத்தை தழுவாததால் யுதகிறிஸ்தவ சபை வளரவில்லை மாறாக சாதி சமரம் செய்துகொண்ட புறஜாதிகளின் கிறிஸ்தவ சபை வளர்ந்துகொண்டிருக்கிறது.

### சமய சமரசம் செய்யாத சபை

சாதிக்கு அடுத்தார்போல் இருப்பது சமயம். சமயம் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாதது, ஆனால் சாதியைப் போன்று மாற்றிக்கொள்ள முடியாதது அல்ல. சாதியைப் போன்றே சமயமும் பிறப்பில் நம் பெற்றோரால் வருவதுதான். ஆனால் இரண்டுமே மாற்றிக்கொள்ளமுடியாததல்ல. பல்லாயிரம் ஆண்டுகளாக மனித இனத்தோடு ஊறிப்போயிருந்த சாதியையே நற்செய்தி மாற்றமுடியுமானால் அவ்வப்போது புதிது புதிதாக உருவாகிக்கொண்டிருக்கும் இந்த உலகில் சமய சமரசம் செய்துகொள்வது தவறு என்று மற்ற சமயத்தார் நினைத்தால் கிறிஸ்தவமோ, இஸ்லாமோ அல்லது பௌத்தமோ இந்த அளவு வளர்ந்திருக்காது.

பிறசமயங்களில் இருக்கும் பல்வேறு நம்பிக்கைகள் யுத சமயத்திலும், யுத சமயத்தில் உள்ள அநேக நம்பிக்கைகள் இன்றும் கிறிஸ்தவத்திலும் இஸ்லாமிலும் இருக்கிறது. இன்றும் கிறிஸ்தவர்களுக்கு பெரும்பான்மையான சமய நம்பிக்கைக்கு மூலஆதாரமாக இருப்பது யுத சமய நம்பிக்கைகளே. யுதர்களின் சமய நம்பிக்கைப்படி கடவுள் ஆவியாய் உருவமற்றவராய் இருக்கிறார், அவரை ஒரு உருவத்தில் கற்பனை செய்வது பாவம், அதிலும் ஒரு மனிதனாகத் தோன்றினாலும் நம்பப்படுவார் ஆனால் ஒரு மனிதனாக பிறந்தார் என்பதை ஏற்பது இயலாத ஒன்று. இப்படியிருக்கையில் யோவான் ஆவியாக இருந்த கடவுள்தான் வார்த்தையாக இருந்தார் என்றும், அவரே மாம்சத்தில் மனிதனாகப் பிறந்தார் என்கிறான் (யோவான் 1:14).

தோமா இயேசுவை முதன் முதலில் "என் தேவனே, என் ஆண்டவரே" என்று பழைய ஏற்பாட்டில் "தேவனாகிய கர்த்தர்" என்னும் பதத்தை உபயோகப்படுத்தி இயேசுவே மனிதஉருவில் இருக்கிற கடவுள் என்று அறிக்கையிட்டான். இதை அப்போஸ்தலர்கள்

உட்பட பல யுதர்கள் ஏற்றார்கள். அத்துடன் இதை நம்புவோரை கொலை செய்வதற்கான அதிகாரத்தை கையிலெடுத்துக்கொண்டு சென்ற பவுல், அதை நம்பாத நிலையில் அவனை நம்பவைக்கும்படி அவனை சந்தித்து, "நீ துன்பப்படுத்துகிற இயேசு நான்தான்" என்று அவனுக்கு கடவுளின் உருவத்தின் நிலையை எடுத்துரைக்கிறார். இதை விசுவாசித்தவன் அவரை அப்படியே "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" என்று அறிவிக்கிறான் (கொலோ-2:9). "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது-2:24) என்று பேதுரு இயேசுவை கடவுளாக அறிவிக்கிறான்.

கடவுள் மனிதனாகப் பிறந்தார் என்று பல யுதர்கள் நம்பினாலும் பிற்காலத்தில் அந்நம்பிக்கை அவர்களுக்குள்ளே வேரூன்றவில்லை. அதற்கான பல்வேறு முயற்சிகளை மத்தேயு "இந்த இயேசுவே தீர்க்கதரிசிகள் அறிவித்த மேசியா என்றும், அவர் யுத வம்சத்தில் பிறந்தவர் என்றும் தாவீதின் குமாரன்" என்றும் அவனுடைய நற்செய்தி நூலில் எழுதினாலும் அதை நம்பிய யுதர்கள் மிக சொற்பமே. யோவானும் "இந்த உலகைப் படைத்த அந்த வார்த்தைதான் இப்போது இயேசு என்னும் மனிதராகப் பிறந்திருக்கிறார்" என்று எழுதியும் யுதர்களை நம்பவைக்க முடியவில்லை. பேதுரு பெந்தேகோஸ்தே அன்று பலநாடுகளிலிருந்து வந்து கூடியிருந்த யுதர்களுக்கு அவரவர் புரிந்துகொள்ளும் பாஷைகளில் பேசியும், யோவேல் தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனத்தின் அடிப்படையிலும், ஏசாயா மற்றும் தாவீதின் வார்த்தைகளையும் மேற்கோள்காட்டியதால் 3000 பேர் "எகோவா கடவுள் மனிதனாகப் பிறந்தார்" என்ற சத்தியத்தை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்ந்தார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளாக எகோவா கடவுளின் பெயரைச் சொல்லக்கூட பயந்தவர்கள், ஒரு சாதாரன மனிதனாக அதுவும் புறஜாதிகள் கையால் ஈனச்சிலுவையில் மரித்ததை ஏற்கமுடியாமல் இயேசுவை கடவுளாக ஏற்க மறுத்தனர். சர்வ வல்லமையுள்ள கடவுள் மனிதர்களுக்கு இருக்கும் காது போன்ற மாமிச காது இல்லாமலே கேட்பார், கண்கள் இல்லாமலே பார்ப்பார், வாய் இல்லாமலே பேசுவார், கால்கள் இல்லாமலே நடப்பார், கைகள் இல்லாமமே செய்வார் என்ற நம்பிக்கைக்கொண்டவர்களுக்கு மனிதஉருவில் வருவார் என்பதை ஏற்கமுடியவில்லை. மனிதஉருவை ஏற்பதால் அவர் எந்தவிதத்திலும் அவருடைய தெய்வத்துவங்களை குறைத்துக்கொள்ளப்போவதில்லை என்கிற ஆன்மிக சித்தாந்தம் அறியாததினால் அவர்கள் இயேசுவை நம்பவில்லை. அவர்களுக்காகவே இயேசு "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்" என்று யோவான் 10:17ல் கூறுகிறார். அதையே பவுல் பிலிப்பியர் 2:9-11ல் இயேசு மனிதனாகப் பிறந்து, மரித்து, உயிர்த்தெழுந்த பின்பு, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு கொடுத்தார் என்கிறான். இத்தனையும் அறிந்து தெரிந்த யுதர்கள் முதலில் ஏற்றுக்கொண்டாலும் பின்பு சாதி ஒற்றுமையின் காரணமாகவும், சமய நம்பிக்கையின் வேற்றுமையை சமரசம் செய்யவேண்டிய காரணத்தாலும் பின்வாங்கிப்போனார்கள். ஆனால் இவைகளை அறியாத புறஜாதிகள் நம்பி ஏற்று கிறிஸ்தவர்களானார்கள்.

**தொடரும்.......**


Advertisement Charges for
கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்
Monthly Magazine

Front side inner cover area - 15,000
Back side inner cover area - 15,000
Back side - 20,000
Full Page - 10,000
½ Page - 5,000



For Further Queries..

Tinnevelly Christian Historical Society
2-2-3(4), North Street,
Bungalow Surandai - 627859
Tenkasi District

Email : christianhistorical@gmail.com
Call : 04633 290401
+91 9176780001 +91 7538812218

Trusted Name
AVALON
Since 1995

# AVALON DATA PRODUCTS

## COMPUTER, MOBILE & CCTV SUPER STORE

Tower Complex, Trivandrum Road, Murugankurichi, Palayamkottai, Tirunelveli - 2.
Ph: 0462 2502494, 98422 26494 Visit us at www.avalondataproducts.com

Superior Products created to keep you on top of everyday tasks.

EASY FINANCE AVAILABLE
BAJAJ FINSERV | HDFC BANK

Celebrating 25 years ANNIVERSARY

AVALON
VMP Complex,
200 Feet Radial Road,
Pallikaranai, Chennai - 600100.
Ph: 91760 77111




- Desktop
- Laptop
- Mobile
- Tablet
- iPhone
- iPad
- LED TV
- Scanner
- LCD Projector
- Printer
- CCTV Camera
- Speaker
- Digital Camera

Original Accessories Available!

Live Demo



## EXCLUSIVE STORES

| hp | DELL | ASUS | lenovo |
|---|---|---|---|
| Trivandrum Road, Palayamkottai. 0462 2500040, 90432 30718 | Tiruchendur Road, Palayamkottai. 0462 2578494, 98658 46494 | Tiruchendur Road, Palayamkottai. 0462 2578494, 63795 65554 | Trivandrum Road, Palayamkottai. 0462 2502409, 99521 94848 |

DELL hp lenovo acer ASUS SAMSUNG SONY oppo vivo mi LG
EPSON Canon ZEBRONICS NUMERIC TVS CP PLUS alhua HIKVISION Enter